விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 20.03.2021 சனிக்கிழமை | இதழ் : 110 | பக்கங்கள் : 16



06

2009 இற்கு முற்பட்டதை கதைக்க விரும்பவில்லை!




09

சீனாவை எதிர்க்க விரும்பாத தமிழ்த் தேசிய தலைமைகள்



11

மாகாண சபை முறைமை என்பது கொரோனாவை விடக் கொடியது!



13

இந்தியா 'த்ரில்' வெற்றி!

### இலங்கை மீதான பிரேரணை

# ஜெனிவாவில் திங்களன்று வாக்கெடுப்பு!

கொழும்பு, மார்ச் 20

இலங்கை தொடர்பான ஜெனிவா பிரேரணை மீது நாளை மறுதினம் திங்கட்கிழமை வாக்கெடுப்பு நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 15




## நாடு திரும்பும் தொழிலாளர்களை வீடுகளில் தனிமைப்படுத்துங்கள்

### ஜனாதிபதி செயலகம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச்.20

ஐக்கிய மக்கள் சக்தியினரால் ஜனாதிபதி செயலகம் முன்பு நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

வெளிநாட்டில் பணிபுரிந்து நாடு திரும்பும் தொழிலாளர்களை அவர்களது வீடுகளிலேயே தனிமைப்படுத்தி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்து 15

## மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தடை!

### பிரிட்டன் அமைச்சர் அடம்ஸ் அறிவிப்பு



லண்டன், மார்ச்.20

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட மேலும் பலருக்கு எதிராக தடைகளை விதிப்பது குறித்து ஆராய்ந்து வருவதாக பிரிட்டன் அமைச்சர் நைஜல் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரம் குறித்து பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு 15

### நாயாறு மீனவர் பிரச்னைக்கு தீர்வு!

## 150 சிலாபம் கடற்றொழிலாளர் மீன்பிடியில் ஈடுபட அனுமதி!



முல்லைத்தீவு, மார்ச் 20

முல்லைத்தீவு நாயாறு பிரதேசத்தில் நீடித்த, கடற்றொழிலாளர்களின் தொழில்சார் பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காணப்பட்டது.

இதன்படி நாயாறு பிரதேசத்தில் பூர் 15

## சிறுபான்மைச் சமூகங்களை இலக்குவைக்கும் வர்த்தமானியை உடன் ரத்து செய்ய வேண்டும்!

### இலங்கையிடம் சர்வதேச யூரிகள் ஆணைக்குழு வலியுறுத்து

கொழும்பு, மார்ச்.20

இன, மத ரீதியான வன்முறைகளைத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்படுவோருக்கு புனர்வாழ்வளிப்பது தொடர்பில் அண்மையில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் உள்ளடக்கங்கள் இன, மத சிறுபான்மைச் சமூகங்களை இலக்குவைக்கும் வகையில் அமைந்திருப்பதாகத் தெரிவித்திருக்கும் சர்வதேச யூரிகள் ஆணைக்குழு, இந்த நடவடிக்கையை கடுமையாகக் கண்டித் 15

## யாழ்.பல்கலை மாணவர் இருவர் உட்பட வடக்கில் மேலும் 9 பேருக்குத் தொற்று!

யாழ்ப்பாணம், மார்ச்.20

வடக்கு மாகாணத்தில் மேலும் 9 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த தாய், மகள் உட்பட யாழ்ப்பாணத்தில் 6 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர் என்று வடமாகாண சுகாதார சேவைகள் பணிப் 15

## அச்சுறுத்தல், அடக்குமுறைகளுக்குள் நீதி வேண்டி மட்டக்களப்பில் பேரணி!

மட்டக்களப்பு, மார்ச் 20

அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகளுக்குள் மத்தியில் தமிழினத்துக்கு நீதி வேண்டியும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தவும் வலியுறுத்தி மட்டக்களப்பில் 15

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை அரசு இலங்கைக்கு அழைக்கவேண்டும்

### பிரதீப மஹாநாமஹேவா வலியுறுத்து



கொழும்பு, மார்ச் 20

இலங்கைக்கு கண்காணிப்பு பயணமொன்றை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையார் மிச்செல் பச்சலெட் அம்மையாருக்கு அரசு அழைப்பு விடுக்கவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும், அனைத்துலக அரசியல் விமர்சகருமான கலாநிதி பிரதீப மஹாநாம 15

## இந்தியாவும் ஜெனிவாவில் எங்களுடன் கைகோர்க்கும்!

### இப்போதும் நம்புகிறது இலங்கை



கொழும்பு, மார்ச் 20

ஜெனிவாவில் பல நட்பு நாடுகள் எங்களுடன் கைகோர்த்துள்ளன. இம்முறை இந்தியாவும் எங்களுடன் கைகோர்க்கும் என்று நம்புகிறோம் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித 15

## ஜெனிவாவில்...

இலங்கையிலும் சர்வதேசத்திலும் உற்று நோக்கப்படும் இந்தத் தீர்மான வரைவில் “பொறுப்புக்கூறலை முன்னேற்றும் நோக்கத்துடன், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றம் துஷ்பிரயோகங்கள் என்பன தொடர்பான சான்றுகளைப் பாதுகாப் பது, பகுப்பாய்வு செய்வது என்பவற்றின் முக்கியத்துவதை உணர்ந்து, தகவல்களை யும் சான்றுகளையும்திரட்டிப் பகுப்பாய்வு செய்து பாதுகாப்பதற்கும் அழைப்பு விடுக்கப்படும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், பாரிய மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மோசமான மீறல்கள் என்பவற்றின் பொறுப்புக் கூறலுக்கான எதிர்காலத்திட்டங்களுக்கான சாத்தியமான மூலோபாயங்களைத் தயாரிப்பதற்கும், பாதிக்கப்பட்டோருக்கும் உயிர்பிழைத்தோருக்கும் ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கும், உரிய நியாயாதிக்கத்தைக் கொண்ட உறுப்பு நாடுகளில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும், மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணையாளரின் அலுவலகத்தின் வல்லமையைப் பலப்படுத்தும் சரத்துக்களும் தீர்மானத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இது இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை (IIIM) ஒன்றுக்கான அடிப்படையாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

மேலும் இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறைகள், நினைவு கூரலுக்கான உரிமை மறுப்பு மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூகத்தினர் மீதான கட்டுப்பாடுகள், துன்புறுத்தல்கள் தொடர்வதைக் குறிக்கும் வகையிலான உள்ளடங்கங்கள் இதில் அமைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் புதிய வரைவுத் தீர்மானம் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

அத்துடன், ஐ.நா ஆணையாளர் மிச்செல் பச்சலெட்டின் பரிந்துரைகளை அமுல்படுத்த இந்தத் தீர்மானம் தவறிவிட்டதாகவும் தமிழ் அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

## சிறுபான்மைச்...

துள்ளது.

இந்நிலையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலின் உள்ளடக்கங்கள் தொடர்பில் சர்வதேச யூரிகள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை வருமாறு:

ஒருவரை விசாரணைகளின்றி இரு வருட காலத்துக்குத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு அனுமதியளிக்கும் வகையில் வெளியிடப்பட்டிருக்கும் புதிய வழிகாட்டல்களைக் கடுமையாகக் கண்டனம் செய்கின்றோம். இந்த வழிகாட்டல்கள் குறிப்பாக இன,மத அடிப்படையிலான சிறுபான்மைச் சமூகத்தை இலக்குவைப்பவையாக அமைந்துள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கையெழுத்திடப்பட்டு கடந்த 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் இன,மத ரீதியான அடிப்படைவாத சிந்தனைகளைப் பரப்புதல் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டமைக்காகப் பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களைப் புனர்வாழ்வுக்கு உட்படுத்துவது தொடர்பில் பின்பற்றப்படக்கூடிய வழிகாட்டல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தத் தீர்மானம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆராயப்படவில்லை என்பதுடன் நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியாலேயே தன்னிச்சையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதன்படி இன, மத ரீதியில் சமூகங்களுக்கிடையில் வன்முறைகளைத் தூண்டுதல், அமைதியின்மையை ஏற்படுத்தல், அடிப்படைவாதச் சிந்தனைகளை விதைத்தல் போன்றவற்றில் ஈடுபடுவோரை விசாரணைகளின்றி இருவருடங்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்களில் தடுத்துவைத்து புனர்வாழ்வளிக்க முடியும். -என்றுள்ளது. (அ-எ)

மனித உரிமை மீறல்கள் மற்றும் நம்பத்தகுந்த போக்குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்ட இலங்கை அதிகாரிகள் மீதான சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகளை பரிசீலிக்க உறுப்பு நாடுகளுக்கு தனது அறிக்கையில் மிச்செல் பச்சலெட் அழைப்பு விடுத்திருந்தார்.

முன்மொழியப்பட்ட தீர்மானம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கத் தவறிவிட்டதாக எழுந்த பரவலான குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் பிரச்னைகள் தொடர்பில் இலங்கைக்கு கடமைகள் குறித்து பிரிட்டன் பாரளுமன்றில் நேற்று முன் தினம் விவாதம் இடம்பெற்றது.

## நாடு திரும்பும்...

இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகம் முன் ஆர்ப்பாட்டம் செய்ய ஒதுக்கப்பட்ட இடத்தில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, ஹர்சன ராஜ கருணா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ஐ.நா. மனித...

ஹேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கைக்கு 2014 ஆம் ஆண்டிலும் இதேபோன்றதொரு நிலைதான் ஏற்பட்டிருந்தது. அப்போது மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த பேராசிரியர் நவநீதம்பிள்ளை அம்மையாருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதனை ஏற்று அவர் நாட்டுக்கு வந்தார். அனைத்து பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டார். குறைகளையும் பட்டியலிட்டுக்காட்டினார். ஆனாலும் அவர் யதார்த்தத்தை புரிந்துகொண்டார். இளைஞர் பாராளுமன்றம் குறித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

இலங்கை வருவதற்கு முன்னர் அந்நாடு தொடர்பில் இருந்த மனநிலை விஜயத்தின் பின்னர் மாறியதாக நவநீதம்பிள்ளை அம்மையார் குறிப்பிட்டிருந்தார். யாழ். பயணத்தின்போது மொழி உரிமைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர்ந்தார்.

எனவே, இலங்கை வருமாறு தற்போதைய மனித உரிமைகள் ஆணையாளருக்கும் அழைப்பு விடுக்கவேண்டும். அதனை பிற நாடுகள் சாதகமான விடயமாகப் பார்க்கக்கூடும். அறிக்கைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டே இலங்கை தொடர்பில் அவர் விம்பமொன்றை உருவாக்கி வைத்திருப்பார். ஆகவே, இலங்கைக்கு நேரில் வந்து, பல தரப்புகளுடன் கலந்துரையாடி நிலைமையை கண்காணித்தால் அவரால் யதார்த்த நிலைமையை புரிந்துகொள்ள முடியும். தவறான விம்பமும் உடையக்கூடும்.

அறிக்கையாளர்கள் வருவதைக்காட்டிலும் மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் வந்தால்தான், இலங்கை என்ன செய்துள்ளது, எவ்வாறான மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதனை நேரில் அவதானிக்க முடியும்-என்றார்.

## மனித உரிமை...

கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் என்பன நிகழ்ச்சி நிரலில் மிகவும் முக்கியம் வாய்ந்த விடயங்களாக காணப்பட வேண்டும்.

மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு பொறுப்புக்கூறல் மிகவும் அவசியமானதொன்றாகும்.

இதேவேளை, உலக நாடுகளில் மனித உரிமை மீறல் செயல்பாடுகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக சில தடைகளை விதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்நிலையில் மேலும் பலருக்குத் தடைகளை விதிப்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என அவர் குறிப்பிட்டார். (அ-எ)

## இந்தியாவும்...

உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை மீதான வாக்கெடுப்பு திங்களன்று நடக்கவுள்ளது.

இங்கிலாந்து, கனடா மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளால் சமர்ப்பிக்கப்படும் இந்த பிரேரணை, அரசியல் நோக்கங்களுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர்கள் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர், நமது நாட்டின் உள் விவகாரங்கள் மீது குற்றம் சாட்டுவது அல்லது வாக்களிப்பது சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைகள் பேரவையின் பொறுப்பு அல்ல என்று தெரிவித்தார்.

”பல ஆண்டுகளாக, நம் நாட்டுக்கு எதிராக பல்வேறு மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. எங்கள் மீது சுமத்தப்பட்ட தவறான குற்றச்சாட்டுகளை தோற்கடிக்க முயற்சிக்கிறோம். பல நட்பு நாடுகள் இதில் எங்களுடன் கைகோர்த்துள்ளன. இம்முறை இந்தியாவும் எங்களுடன் கைகோர்க்கும் என்று நம்புகிறோம்”-என்றார்.

## அச்சுறுத்தல்...

நேற்று பெரும் மக்கள் பேரணியும் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் இடம்பெற்றன.

இதேவேளை போராட்டக்காரர்களை அச்சுறுத்தவும் - பேரணியை தடுக்கவும் மட்டக்களப்பு நகரில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. தண்ணீரை வீசியடிக்கும் வாகனங்களும், கலகமடக்கும் பொலிஸாரும் போராட்டம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்ட காந்திபூங்கா முன்பாக நிறுத்தப்பட்டனர்.

இதனால், போராட்டம் ஏறாவூரின் சித்தாண்டி பிரதேசத்திற்கு மாற்றப்பட்டது. மாவடி வேம்பு மருங்கையடி பிள்ளையார் ஆலயம் அருகே கூடிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக சித்தாண்டி சந்தி பிள்ளையார் ஆலயம் வரை பேரணியாக சென்றனர். (ஐ)

## யாழ். பல்கலை...

பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 304 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 427 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதில் 9 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 பேரும் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தலா ஒருவரும் தொற்றாளராக கண்டறியப்பட்டனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் கொரோனா தோற்று அறிகுறிகளுடன் சேர்க்கப்பட்ட மானிப்பாயைச் சேர்ந்த தாய்க்கும் மகளுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது.

அத்துடன், யாழ்ப்பாணம் நகர நவீன சந்தை வியாபார நிலையம் ஒன்றில் பணியாற்றும் 21 வயது இளைஞன் ஒருவர் தொற்று அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட நிலையில் கொரோனா நோய்த்தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார்.

யாழ்ப்பாணம் மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வசிக்கும் 15 வயதுச் சிறுமிக்கு தொற்று கண்டறியப்பட்டது. அவர் ஏற்கனவே சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் பயிலும் மாணவர்கள் இருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது. இவர்கள் குருநாகல் மற்றும் கம்பஹா மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

இதேவேளை, வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை பெண் பணியாளர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி மரக்கறி சந்தையில் சிலரிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் பெண் வியாபாரி ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

பரந்தனைச் சேர்ந்த பெண் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்று அறிகுறிகளுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது-என்றார். (அ-எ)

## 150 சிலாபம்...

வீகமாக தொழிலில் ஈடுபட்ட சிலாபம் கறுக்குப்பனை மீனவர்களுக்கு சொந்தமான சுமார் 150 படகுகளுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்க முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

மேலும், முல்லைத்தீவு மாவட்ட மீனவர் பிரதிநிதிகளும் கறுக்குப்பனை மீனவர் பிரதிநிதிகளும் இணைந்த குழு ஒன்றை அமைத்து, அனுமதிக்கப்படாத படகுகள் மற்றும் சட்ட விரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்தவும் இதன்போது பொது உடன்பாடு எட்டப்பட்டது. (ஐ)

## தமிழர் நில...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் வழக்குரைஞர் டேவிட் மாடஸ் ஆகியோரும் இந்த மாநாட்டில் முதன்மை உரை ஆற்றுகின்றார்கள்.

நான்கு அமர்வுகளாக இடம்பெறும் இந்த மாநாட்டில், முதலாவது அமர்வு ”வடக்கு - கிழக்கில் தமிழர் நிலங்கள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுதல்” என்ற தலைப்பில் நடைபெறும்.

இந்த அமர்வில் வடக்கு - கிழக்கில் நடைபெறும் நில அபகரிப்பு தொடர்பில் “முடிவற்ற போர்” என்ற ஆய்வு அறிக்கையை வெளியிட்ட அமெரிக்க சிந்தனை மையமான ஒக்லாண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனுராதா மிட்டால், ஒபாமா நிர்வாக வெள்ளை மாளிகை உத்தியோகத்தரும் தற்போது வட கரோலினா மாநிலத்தின் செனட்டருமான வெய்லி நிக்கல், மாற்று கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளர் பவானி பொன்சேகா, முன்னாள் மாகாண காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

இரண்டாவது அமர்வு ”நில அபகரிப்பு தொடர்பிலான சட்ட மற்றும் அரசியல் சவால்கள் மற்றும் பரிகாரங்கள்” என்ற கருப்பொருளில் நடைபெறும். இந்த அமர்வில் யாழ். மாவட்ட மேல் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா, முன்னணி சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல், வடக்கு - கிழக்கு சிவில் அமைப்புக்கள் சார்பில் தவத்திரு வேலன் சுவாமிகள், வட மாகாண முன்னாள் அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

மூன்றாவது அமர்வு ”நிலம், வெளிநாட்டு முதலீடு மற்றும் இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கைகள்” என்ற தலைப்பில் நடைபெறும். இந்த அமர்வில், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தகைசார் பேராசிரியரும் “வெளிநாட்டு முதலீடு தொடர்பிலான சட்டம்” என்ற பிரபல்யம்மிக்க நூலை எழுதியவருமான கலாநிதி எம். சொர்ணராஜா, யாழ். பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை முன்னாள் பேராசிரியர் வி.நித்தியானந்தம், பிரித்தானியா நோட்டிங்காம் பல்கலைக்கழக சர்வதேச மனித உரிமைகள் பேராசிரியர் கலாநிதி தமிழ் ஆனந்தவிநாயகன், சட்டத்தரணி வெரோனிகா பாவ்லோஸ் காயா, மனித உரிமைகள் ஆலோசகர் லொரான்ஸோ பியோரிட்டோ ஆகியோர் கலந்துகொள்கின்றனர்.

புலம்பெயர் தமிழ் இளையோர்கள் கலந்துகொள்ளும் அமர்வு ஒன்று இறுதியாக நடைபெறும்.

இந்த மாநாட்டில் பங்கேற்பவர்கள்: Zoom Meeting ID: 925 7244 2450; Web link: http://bit.ly/TamilLand Pass code: 238923) மூலம் பங்கேற்க முடியும். (ஐ)

## இதுவும் நடந்தது!

நமது சட்டமேதை அமரர் ஜி.ஜி.பொன்னம்பலத்தின் சட்டத்திறமையை எடுத்தியம்ப பல வழக்குகள் பற்றி பிரஸ்தாபிக்கப்படுவதுண்டு.

அதில் ஒரு வழக்கு: யானை மார்க் தீப்பெட்டி வழக்கு. அந்தக் காலத்தில் கட்டுப்பாட்டு விலைகளிலும் பார்க்க பொருட்களை விற்னை செய்வது தண்டனைக்குரிய குற்றம். இப்போதும் தான் என்பது வேறு விடயம்.

ஆனால் அந்தக் காலங்களில் அதுபோன்ற வழக்குகள்தான் முக்கியமான வழக்குகள்.

ஒரு கடைக்காரர் யானை மார்க் தீப்பெட்டியை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க இரண்டு மடங்கு விலைக்கு விற்றுவிட்டார் என்பதுதான் வழக்கு.

அந்த வழக்கில் கடைக்காரருக்காக ஆஜரானார் ஜி.ஜி.

யானை மார்க் தீப்பெட்டியில் எதிரெதிரே பார்த்தவாறு இரண்டு யானைகள் இருக்கும்.

கட்டுப்பாட்டு விலை அறிவிக்கப்பட்ட வர்த்தகமானியில் தெரிவிக்கப்பட்டிருந்த விலை:

ஒரு யானை மார்க் தீப்பெட்டி: பத்துச் சதம்.

ஆனால் அவர் விற்றது இருபது சதத்திற்கு.

ஜிஜி வாதிட்டது. 'ஒரு யானை மார்க் தீப்பெட்டி தான் பத்துச் சதம். ஆனால் தனது கட்சிக்காரர் (கடைக்காரர்) விற்றது இரண்டு யானை மார்க் தீப்பெட்டி'.

வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இப்படியொரு வழக்கு உண்மையில் நடந்ததா என்பது இந்த ஊர்க்குருவிக்கு தெரியாது. ஆனால் ஜி.ஜி.யின் சட்ட வாதத்திறமையை விதந்துரைப்பதற்காக இப்படி பல கதைகள் கூறப்படுவதுண்டு.

இது எதற்கு இப்போது என்று நீங்கள் நினைக்கலாம். அதாவது நீதிமன்றில் வழக்கு என்றால், சட்டத்தரணி வைக்கின்ற வாதங்களே அந்த வழக்கை தீர்மானிக்கும் என்பதை ஞாபகப்படுத்தவே அதனை இங்கே குறிப்பிட்டேன்.

நமது நாட்டை மாத்திரமன்றி, முழு உலகையும் திரும்பிப் பார்க்கவைத்த சம்பவம் ஈஸ்டர் ஞாயிறன்று நடந்த பயங்கரவாதத் தாக்குதல். அந்தத் தாக்குதல் நடந்து முடிந்ததும், அப்போதைய அரசாங்கத்தின் மீது குற்றம்சுமத்தப்பட்டது. அப்போதைய அரசாங்கம் முன்கூட்டியே தகவல் கிடைத்தும் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டது.

பின்னர் அதுதொடர்பாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒரு ஆண்டுக்கும் மேலாக நூற்றுக்கணக்கானவர்களிடம் விசாரணை நடாத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையை வைத்து சட்டநடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் பரிந்துரைத்தது. ஆணைக்குழு அறிக்கை குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், அதாவது தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளை இனம்காண ஆணைக்குழு தவறிவிட்டது என்பது உண்மையானாலும், தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை கண்டறிந்து அதற்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தது.

இனி அந்த ஆணைக்குழுவின் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், இப்போது வெளியாகியுள்ள புதிய தகவலின் படி அந்த அறிக்கையில் ஏராளமான ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருப்பதால், அதனை ஆதாரமாக வைத்து சட்டநடவடிக்கை எடுப்பது இயலாத காரியம் என்கின்றன.

ஏப்ரல் 21ல் தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டவர் 29ல் நடந்த குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார் என்றும், தற்கொலைத் தாக்குதல்தாரி ஒருவரின் மனைவியான புலேந்தினி மகேந்திரன், கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ஒருவரின் மனைவி என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதாம். இதுபோல பல முரண்பாட்ட தகவல்களாம்.

இந்த அறிக்கையை வைத்து சட்ட நடவடிக்கை எடுக்க நீதிமன்றம் போனால், ஜி.ஜி போன்ற சட்ட மேதை தேவையில்லை. சாதாரண சட்டத்தரணி ஒருவரே வழக்கை இல்லாமல் பண்ணிவிடலாம் என்கின்றன சட்டத்துறை தகவல்கள்.

நாட்டை, ஏன் உலகையே உலுக்கிய சம்பவம் ஒன்றை விசாரித்து அறிக்கையிடுவதிலேயே இத்தனை தவறுகள் எனில்...

இந்த லட்சணத்தில்தான் போர்க்குற்றங்களிலிருந்து விடபட உள்ளக விசாரணையை நடாத்த வேண்டும் என்கிறார் நமது பீல்ட் மார்ஷல்!

- ஊர்க்குருவி.

# போதைப் பொருள் விநியோகத்தை கட்டுப்படுத்த கண்காணிப்பு குழு!

## வடக்கு ஆளுநர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 20

**வடக்கில் போதைப் பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்த மாகாண மட்டத்தில் குழு ஒன்றை அமைத்து கண்காணிப்பு பொறிமுறை வேண்டும், என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.**

போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்பதுடன், அவர்களுக்கு மருத்துவ மற்றும் உளவள ஆலோசனை ஏற்பாடுகள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று ஆளுநர் தலைமையில் அவரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் உதவிப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில், "போதைப் பொருள் பாவனைக்கு உட்பட்டவர்களை அதிலிருந்து மீட்டு மீண்டும் அவர்களின் குடும்பம், சமூக நன்னிலையை மேம்படுத்தலை முதன்மையாகக் கொண்டு திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கான ஆளணி, மற்றும் கட்டடம், இதர வசதிகள் குறித்து பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. இந்தத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்க 2 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், 35 பாடசாலைகளில் மாணவர்களுக்கு செயலமரவுகளை நடத்தவும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

வடக்கு ஆளுநர் கருத்துரைக்கையில், "சிலரால் சட்டவிரோதமாக விநியோகிக்கப்படும் போதைப்பொருட்கள் சமூகத்தில் விநியோகிக்கப்படுவதை கடந்த சில நாட்களாக கிடைக்கப்பெற்ற சமூக விரோத செயல்கள் மூலம் அறிய முடிகிறது. இவ்வாறு போதைப் பொருட்களை விநியோகிப்பவர்கள் அதனைப் பயன்படுத்துவதில்லை. எனவும் அவர்கள் வெறுமனே விநியோகதாரர்களாக மாத்திரமே செயல்படுகின்றனர். எனவே, இதனை கட்டுப்படுத்துவதற்கு மாகாண மட்டத்தில் குழு ஒன்றை அமைத்து தொடர்ச்சியான கண்காணிப்பு பொறிமுறை மேற்கொள்ள வேண்டும்" என்று ஆளுநர் வலியுறுத்தினார். (ஐ-3)



யாழ். பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் இடம்பெற்றது. பல்கலைக்கழக நலன்புரி கட்டடத்தில் இடம்பெற்ற இந்த முகாமில் மாணவர்கள், பணியாளர்கள் உட்பட பெருமளவானோர் பங்கேற்றனர்.

# ஆறுகளை காத்திடுவோம் கருத்திட்டம் கிளிநொச்சியில்!

கிளிநொச்சி, மார்ச் 20

ஆறுகளைப் பாதுகாப்பதற்கான தேசிய சுற்றாடல் வேலைத் திட்டமான "ஆறுகளை காத்திடுவோம்" (சுரகிமு கங்கா) நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆசிர்வாதத்துடன் கதிர்காமம் புனித மாணிக்க கங்கைக்கு அருகில் தேசிய நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இதேசமயம், வடக்கு மாகாண மட்ட நிகழ்வு கிளிநொச்சி கனகராயன் ஆற்றுப் படுக்கையின் ரை ஆறு பகுதியில் நடத்துவதற்கு மத்திய சுற்றாடல் சபை ஒழுங்கு செய்துள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மரநடுகையும் இடம்பெறும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வட மாகாண கிளிநொச்சி அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# வடமராட்சி கிழக்கில் தொடரும் சட்டவிரோத மணல் கடத்தல்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் நடவடிக்கை தொடர்ந்து வரும் நிலையில் நேற்றைய தினமும் உழவு இயந்திரத்துடன் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் சிலர் ஈடுபட்ட நிலையில் அங்கு சென்ற பருத்தித்துறை பொலிஸாரினால் ஒருவர் கைது செய்யப்பட்டு, மணல் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமும் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோத மணல் கடத்தல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனை தடுக்கும் வகையில் பருத்தித்துறை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்தும் தனித்தனியாகவும் விசேட நடவடிக்கை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் நேற்றைய தினம் பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட நபர் தனது சொந்த உழவு இயந்திரத்தை பயன்படுத்தியே மணல் கடத்தலில் ஈடுபட்டிருந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், குறித்த நபரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, நேற்று முன் தினம் வடமராட்சி கிழக்கு குடத்தனை பகுதியில் சட்டவிரோத மணல் கடத்தல் சம்பவத்தில் ஈடுபட்டிருந்த போது பருத்தித்துறை பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டிருந்த இருவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த இருவரையும், மணல் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட இரு டிப்பர் வாகனங்களையும் தலா ஒரு இலட்சம் ரூபா பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.




**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

Eelanadu
20.03.2021 சனிக்கிழமை
சார்வரி, பங்குனி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# கச்சதீவில் இந்தியா கைவைக்குமா?

கச்சதீவை மீண்டும் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகள் இடம்பெற்றுவருவதாக, இந்திய மத்திய கப்பல் மற்றும் தரைவழி போக்குவரத்து துறையின் துணையமைச்சர் வி. கே. சிங் தெரிவித்திருக்கின்றார். இந்தக் கருத்து பலரது கவனத்தை பெற்றிருக்கின்றது. கச்சதீவு, தொடர்பில் ஆங்காங்கே அரசல்புரசலாக சில கருத்துக்கள் அவ்வப்போது வெளியில் எட்டிப் பார்த்திருந்தாலும்கூட, இந்தியாவின் அமைச்சர் ஒருவர் இந்த விடயம் தொடர்பில் தெரிவித்திருப்பது முக்கியமானது.

அண்மையில் கச்சதீவுக்கு மிகவும் அண்மையிலுள்ள யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில், மின்சார உற்பத்தி கட்டுமானங்களில் ஈடுபடுவதற்கு சீன நிறுவனமொன்றுக்கு அனுமதிவழங்கப்பட்டிருந்தது. இதுதொடர்பில் புதுடில்லியிலிருந்து அதிருப்திகள் வெளிப்பட்டன. இதனைத் தொடர்ந்து, இந்த விடயம் இப்போதும் உரையாடப்பட்டு வருகின்றது. இதுதொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக எந்தவொரு நிலைப்பாட்டையும் அறிவிக்கவில்லை. அதேவேளை, குறித்த கட்டுமான ஒப்பந்தத்தை ரத்துச் செய்ததாக அறிவிக்கவுமில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான், கச்சதீவை மீண்டும் இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவதாக கப்பல் துறை துணையமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

1974இல் அப்போது இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி, பாக்கு நீரிணையினை ஊடறுக்கும் இந்திய - இலங்கை கடல் எல்லை பிரச்னைகளை தீர்க்கும் வகையில் உடன்பாடொன்றை மேற்கொண்டிருந்தார். இந்த உடன்பாட்டின்கீழ்தான் கச்சதீவு இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 1976இல், மீண்டுமொரு உடன்பாட்டையும் காந்தி மேற்கொண்டிருந்தார். அவரசகால ஆட்சியின் போது, 1976இல், கருணாநிதி தலைமையிலான தமிழ் நாடு அரசாங்கம் கலைக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்திலேயே காந்தி கச்சதீவு தொடர்பில் மீண்டுமொரு உடன்பாட்டை மேற்கொண்டிருந்தார். இந்த உடன்பாட்டின் அடிப்படையில் மன்னார் கடல்பரப்பிலிருந்து வங்காள விரிகுடாவரையில் இரு நாட்டு மீனவர்களும் மீன்பிடிப்பதற்கான எல்லைக்கோடுகள் போடப்பட்டன. தற்போது, அடிக்கடி தமிழ்நாட்டு மீனவர்கள் எல்லை தாண்டியதாக பிரச்னைகள் எழுவதற்கு இந்த உடன்பாடே பிரதான காரணம். உண்மையில், தமிழ் நாட்டில் அரசாங்கம் இல்லாதவொரு சூழலிலேயே இவ்வாறானதொரு உடன்பாட்டை இந்திராகாந்தி இலங்கையுடன் மேற்கொண்டிருந்தார்.

இலங்கையின் வடக்கு கிழக்கில் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்திருந்த நிலையிலும், இந்தியாவுடன் விடுதலைப் புலிகள் நேரடியாக மோதிக்கொண்ட பின்னணியிலும் 1991ஆண்டு, தமிழ் நாட்டு சட்டமன்றத்தில் கச்சதீவை மீளவும் பெறவேண்டுமென்னும் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது. 2008இல், தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலிதா, கச்சதீவு தொடர்பில் இந்திய உச்ச நீதிமன்றத்தை நாடியிருந்தார். மோடியின் தலைமையில் பி.ஜே.பி பலமான நிலையில் வெற்றிபெற்றிருந்த சூழலில், இந்த விடயம் தொடர்பில் மோடியுடனும் ஜெயலலிதா பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். இதுதொடர்பான வழக்கின்போது, சட்டமா அதிபர் முகுல் ரொகட்ஜி உச்சநீதிமன்ற நீதிபதின் முன்னால், உங்களுக்கு கச்சதீவு வேண்டுமென்றால், நீங்கள் யுத்தத்திற்குத்தான் செல்லவேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்.

சீனாவின் பிடிக்குள் நாடு அதிகம் சென்றுவிட்ட நிலையில், வடக்கு கிழக்கிற்குள் சீனா வந்துவிடலாமோ என்னும் நெருக்கடியானதொரு சூழலில்தான் இந்தியாவின் அமைச்சர் ஒருவர் கச்சதீவை பெறும் முயற்சிகள் இடம்பெறுவதாக தெரிவித்திருக்கின்றார். ஒருவேளை, இலங்கை கச்சதீவை தர மறுத்தால், இந்தியாவிடம் உள்ள மார்க்கம் என்ன, யுத்தமா?

# ஒப்பரேஷன் 'பூ மாலை'க்கு அடையாளமிட்ட பரதனின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி கோபுரம்!



**அனந்த பாலகிட்ணர்**

**1987**ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4ஆம் திகதி பிற்பகல்வேளை, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வான்வெளியை ஊடறுத்தவாறு இந்திய விமானப்படையின் மிராஜ் போர் விமானங்கள் சிலவும், ஓரிரு அன்டநோவ் போக்குவரத்து விமானங்களும் அசுர வேகத்தில் நுழைந்தன. 'ஒப்பரேஷன் லிபரேஷன்' என்ற தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான முதலாவது பரந்துபட்ட இராணுவ நடவடிக்கை, வடமராட்சி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த தருணத்தில், அச்சத்தினால் உறைந்து போயிருந்த வடமாகாண மக்களுக்கு மனத்தைரியத்தை தருவது போலவே இந்திய விமானப்படையின் உணவு மற்றும் மருந்து பொருட்களை வானிலிருந்து யாழ்குடா நாட்டினுள் போடும் நடவடிக்கை அமைந்திருந்தது.

மிகவும் துல்லியமாக, காரைநகர் கடற்படை முகாமுக்கு மேலாக உள்ள வட மாகாண வான்வெளியை ஊடறுத்த இந்திய விமானங்கள், இருபது நிமிடங்களுக்கும் குறைவான நேரத்தில் தமது கைவரிசையை காண்பித்துவிட்டு, வந்த வேகத்திலேயே மீளவும் இந்திய வான் பரப்புக்குள் நுழைந்து கொண்டன.

**ஒப்பரேஷன் 'பூ மாலை'**

இந்தியாவின் இந்த மின்னல் வேக விமானப்படை நடவடிக்கைக்கு ஒப்பரேஷன் 'பூ மாலை' எனப்பெயரிடப்பட்டிருந்தது. இந்திய விமானங்கள் உணவு மற்றும் மருந்து வகைகளை ஏற்றியவாறு யாழ் குடாநாட்டின் வான்பரப்புக்குள் நுழைந்ததும் அவற்றை தரையில் போடுவதற்கு ஓர் அடையாளத்தை மையப்படுத்தவேண்டிய தேவை இந்திய விமானிகளுக்கு ஏற்பட்டிருந்தது. அப்போது அவர்கள் வானிலிருந்து தேர்ந்தெடுத்த முக்கிய அடையாளமே நேற்று முன்தினம் திடீரென மாரடைப்பினால் லண்டனில் காலமான இராஜநாயகம் பரதன், கொக்குவில் புகையிரத நிலையத்துக்கு அருகே அமைத்திருந்த, அகன்று மிக உயரமாக அமைந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் 'நிதர்சனம்' தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் என்பது குறிப்பிடத்தக்கது.

எண்பதுகளின் நடுப்பகுதியில், மிகக்குறைவான வளங்களோடு அடிக்கடி மின்சாரத் துண்டிப்புகளும் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப்பகுதியில் வடமாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைக்காட்சி, வானொலி ஊடகத்துறைக்கு உரமூட்டியவர் இ. பரதன் என்பது குறிப்பிடத்தக்கது. 'ஈழநாடு' பத்திரிகையில் கடமையாற்றிக்கொண்டிருந்த சமயம் ஒரு நாள் இரவுவேளை, மானிப்பாய் வீதியில் அமைந்திருந்த ஈழநாடு அலுவலகத்துக்கு பரதன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை முக்கியஸ்தராக இருந்த இ. பார்த்தீபன் என்ற இயற்பெயரைக்கொண்டிருந்த திலீபன் சகிதம் வந்திருந்தார்.

**ஊடக மகாநாடு**

அப்போது, ஈழநாடு செய்தி ஆசிரியர் கே. ஜி. மகாதேவாவுடன் இரவுப்பணியல் ஈடுபட்டுக்கோண்டிருந்தபோது திலீபனும், பரதனும் எம்மருகே வந்து, தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதர்சனம் தொலைக்காட்சியின் ஆரம்பம் குறித்த ஊடக மகாநாடொன்று நல்லூரில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் இடம்பெறும் என அறியத்தந்தனர். அச்சமயம் திலீபனிடமும், பரதனிடமும் என்னை அந்த ஊடக மகாநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி, மறுநாள் காலை அம் மகாநாட்டுக்கு போகுமாறு செய்தி ஆசிரியர் மகாதேவா எனக்குப் பணித்தார்.


நிதர்சனம் தொலைக்காட்சி அறிமுகம் குறித்த அந்த ஊடக மகாநாட்டில் பங்குபற்றியமை இன்றுங்கூட மனதில் பசுமையாக இருக்கின்றது. அம்மகாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட தளபதியாகவிருந்த கிட்டு என்ற புனைபெயரைக் கொண்டிருந்த சதாசிவம் கிருஷ்ணகுமாரினால் நடத்தப்பட்டிருந்தது. அப்போது, தமக்கேயுரிய புன்முறுவலுடன் ஊடகத்துறை மகாநாட்டை நடத்திய கிட்டு, தமிழீழ தொலைக்காட்சி சேவையின் பெயர் 'நிதர்சனம்' என தெரிவித்ததோடு/ நிதர்சனம் என்பதன் அர்த்தம் 'உண்மை' எனக்கூறி மேலும் விளக்கமளித்தார். அச்சமயம் நிதர்சனம் தொலைக்காட்சியை வடிவமைத்த பரதன் யாவற்றையும் தமக்கேயுரிய மெலிதான புன்னகையோடு அமைதியாக செவிமடுத்தவாறு கேட்டுக்கொண்டிருந்தார்.

**களத்தில் பரதன்**

பரதன் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கியமான நிகழ்வுகளை துல்லியமாக நிதர்சனத்தில் பதிவேற்றிவந்தார். அவருக்கென ஓர் ஊடக அணியொன்று காணப்பட்டிருந்தபோதிலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அன்றைய முக்கிய நிகழ்வுகள், மற்றும் சந்திப்புகள் என்பவற்றை பரதனே அன்று முன்னின்று தமது தொலைக்காட்சி புகைப்படக் கருவியை தோளில் சுமந்தவாறு நிகழ்வுகளை பதிவு செய்திருந்தார்.

(05ஆம் பக்கம் பார்க்க)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு

மார்ச் - 20 சனிக்கிழமை
சார்வரி வருடம் - பங்குனி - 7
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : சப்தமி



# இன்றைய ராசிபலன்

**20.03.2021**

**மேடம்**
பிறர் உங்கள்மீது பொறாமை கொள்ளும்படி சாதனை புரிவீர்கள். இங்கிதமான பேச்சால் உறவினர்களை கவருவீர்கள். சமீபத்தில் இழந்த நம்பிக்கையை பிள்ளைகள் மீட்பார்கள்.

**இடபம்**
கலகலப்பு கூடும். பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும். சில நாள் கவலைகளுக்கு பிறகு இன்று மனம் தெளிவீர்கள். கணவன் மனைவி விட்டு கொடுத்து செல்வது நல்லது.

**மிதுனம்**
பிள்ளைகள் கல்வியில் அக்கறை காட்டுவார்கள். பெண்களுக்கு தைரியம் அதிகரிப்பதால் நன்மை வரும். வெற்றிக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கடகம்**
எல்லா பிரச்னைகளுக்கும் மெல்லத் தீர்வு கிடைக்கும். இளைஞர்கள் கூடுதல் கவனத்துடன் வாழ்க்கையை அணுகுவீர்கள். புது நபர்களைச் சந்தித்து அனுபவத்தை பெறுவீர்கள்.

**சிம்மம்**
பணியாளர்கள் பிறரை அனுசரித்து செல்ல வேண்டியிருக்கும். தொழில் பற்றி உற்சாகமடைவீர்கள். குடும்பம் பொறுப்பாயிருக்கும். சிக்கனமாக இருக்கத் திட்டமிட்டுக் அதை கடைப்பிடிப்பீர்கள்.

**கன்னி**
அலுவலக வேலைகளை முடித்து நிம்மதி அடைவீர்கள். சில நியாயமான விமர்சனங்களை ஏற்றுக் கொள்வது நல்லது. ரகசியங்களை பாதுகாப் பதில் அதிக அக்கறை செலுத்துங்கள்.

**துலாம்**
அவசரச் செயலால் வீண் மனஉளைச்சலுக்கு ஆளாவீர்கள். சாலையில் கவனம் அவசியம். வம்பில் ஈடுபடாதீர்கள். நண்பர்களால் உற்சாக மடைவீர்கள். அன்பளிப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் புரிதல் கூடும். செலவு பற்றிக் கவலை தீரும். இளைஞர்கள் பெற்றோரின் கனவுகளை நனவாக்குவீர்கள். செயல்களில் நேர்த்தி நிறைந் திருக்கும். விருந்தில் பங்கேற்பீர்கள்.

**தனுசு**
பல காலமாக இருந்த துன்பங்களிலிருந்து மீளுவீர்கள்.குடும்பம் விரிவடையும் வாய்ப்பு உள்ளது. பண வரவு கூடும்.உறவினர்களுடன் ஒன்று கூடி மகிழ்வீர்கள். மனம் சாந்தமாகும்.

**மகரம்**
முக்கிய செலவுகள் பற்றிக் கவலை கொள்வீர்கள். திட்டமிட்டு செயல்படுவதன் மூலம் வெற்றியடைவீர்கள். புதிய நபர்களிடம் கவனமாக இருப்பது நல்லது.

**கும்பம்**
வாக்கு சாதுர்யத்தால் பணிகளை வெற்றிகரமாக முடிப்பீர்கள். பணவரவு தாமதப்பட்டாலும் அது பற்றி கவலை இருக்காது. மனதை அரித்து வந்த கவலையில் இருந்து விடுபடுவீர்கள்.

**மீனம்**
நன்மை ஏற்படும். குடும்பத்துடன் பொழுதைக் கழிப்பீர்கள். ஆன்மிக பயணங்கள் மேற்கொண்டு சாந்தமடைவீர்கள். தடைப்பட்ட விஷயங்களை முனைப்புடன் முடித்து நிம்மதியடைவீர்கள்.

## ஆட்சி அதிகாரத்துக்காக மக்களை கைவிட்ட தி.மு.க.

### முதல்வர் பழனிசாமி குற்றச்சாட்டு



புவனகிரி, மார்ச் 20

தி.மு.க.,வினர் ஆட்சி, அதிகாரத் திற்காக மக்களை கைவிட்டவர்கள் என தேர்தல் பிரசாரத்தின்போது முதல்வர் பழனிசாமி தெரிவித்தார்.

புவனகிரி தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் அருண்மொழித் தேவனை ஆதரித்து முதல்வர் பழனிசாமி பேசியபோது மேலும் தெரிவிக்கையில்-

விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என தெரிந்தும் ஹைட்ரோ கார்பன் திட்டத்திற்கு கையெழுத்து போட்டவர் ஸ்டாலின். ஆனால், அந்த திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதுபோல், நாடகம் போடுகிறார். விவசாயிகள் கஷ்டம் குறித்து ஸ்டாலினுக்கு சிந்திக்கவும், பேசவும் தெரியாது. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அதிக நிவாரணம் வழங்கியது அ.தி.மு.க. அரசு. கருணாநிதி மகன் என்பதை தாண்டி, ஸ்டாலினுக்கென்று தனி அடையாளம் உண்டா? அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணி வெற்றி கூட்டணி என மக்கள் முடிவு செய்துவிட்டார்கள்.

கருணாநிதி என்றால் தி.மு.க. தி.மு.க என்றால் கருணாநிதி குடும்பம். கர்நாடக அரசு கபினியில் அணை கட்டுவதை தடுக்க கருணாநிதி தவறிவிட்டார். காவிரி தமிழகத்திற்கு வராததற்கு கருணாநிதி தான் காரணம். கர்நாடகா அணை கட்டுவதை அவர் தடுக்க தவறிவிட்டார். ஆட்சி அதிகாரத்திற்காக மக்களை கைவிட்டவர்கள் தி.மு.கவினர்- என்றார்.



# ஒபாமாவுக்கு பின் ஸ்டாலின்தான்!

## வைகோ புகழாரம்

**சென்னை, மார்ச் 20**

**அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமாவுக்குப் பிறகு ஸ்டாலின்தான் தனது தொகுதிக்கு அடிக்கடி சென்று மக்களைச் சந்திக்கிறார் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ புகழாரம் சூட்டியுள்ளார்.**

சென்னை, கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் திமுக சார்பில் அந்தக் கட்சியின் தலைவர் ஸ்டாலின் போட்டியிடுகிறார். அவரை ஆதரித்து பிரசாரக் கூட்டம் நேற்று முன் தினம் இரவு நடைபெற்றது.

இதில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, திமுக எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் முத்தரசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய வைகோ, ''நான் உலக அரசியலை உற்று கவனிப்பவன். பாரக் ஒபாமா, அமெரிக்க அதிபர் ஆகும் முன்பு செனட்டராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப் பிறகு அவர் மாதம் இரண்டு முறை தனது தொகுதிக்குச் செல்வார். தன்னுடைய தொகுதிக்குச் சென்று அனைத்து மக்களையும் சந்திப்பார். அவர்களின் குறைகளைக் கேட்பார். அந்தக் குறைகளைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்.

நான் அதன் பிறகு பார்க்கிறேன். வாரம் ஒரு முறையாவது தன்னுடைய தொகுதிக்கு வருகிற ஒரு அரசியல்வாதி இருக்கிறாரா என்று கேட்டால், அது ஸ்டாலின்தான். அவர் வீட்டில் இருக்கிறாரா? அல்லது தொகுதியில் இருக்கிறாரா? என்று தெரியவில்லை. அதுதான் மக்கள் பிரதிநிதியின் கடமை.

சென்னை மேயராக ஸ்டாலின் இருந்தபோது, 9 பாலங்கள் கட்டப்பட்டன. இந்தியாவில் இதுபோன்று வேறெங்கும் நடக்கவில்லை. அவரைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் மக்கள் வெற்றிபெறச் செய்ய வேண்டும்-என்றார்.

# முதலமைச்சர் பழனிசாமி விவசாயி அல்ல, விஷ வாயு

## ஸ்டாலின் காட்டமான பேச்சு

தஞ்சாவூர், மார்ச் 20

பச்சைத் துண்டை போர்த்திக் கொண்டு பச்சைத் துரோகம் செய்யும் போலி விவசாயி தான் முதல்வர் பழனிசாமி என்றும், அவர் விவசாயி அல்ல விஷவாயு எனவும் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் தெரிவித்தார். தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்த நாடு பகுதியில் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தி.மு.க தலைவர் ஸ்டாலின் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார். அவர் அங்கு தெரிவிக்கையில்-

டெல்டா விவசாயிகளுக்கு கருணாநிதி துரோகம் செய்துவிட்டதாக கூறும் முதல்வர் பழனிசாமியின் நாக்கு அழுகிபோகும். காவிரி உரிமையை மீட்டுக் கொடுத்து 50 ஆண்டுகள் காப்பாற்றியவர் கருணாநிதி. அந்த உரிமையை மத்திய அரசின் ஜல் சக்தி துறையிடம் அடமானம் வைத்திருக்கும் துரோகி தான் இந்த பழனிசாமி.

காவிரி நடுவர் மன்றம் அமைக்க போராடி அது அமைத்தவர், காவிரி நதிநீர் ஆணையம் அமைத்தவர், காவிரி இறுதி தீர்ப்பை பெற்றுத்தந்தவரும் கருணாநிதி தான். அதேபோல் ஒரு விவசாயி ஆள்வது ஸ்டாலினுக்கு பிடிக்கவில்லை எனவும் பழனிசாமி பேசி வருகிறார். எனக்கு விவசாயியை பிடிக்கும், பச்சை துண்டை போர்த்திக்கொண்டு பச்சை துரோகம் செய்யும்போலி விவசாயியை பிடிக்காது.

வேளாண் சட்டத்தை எதிர்த்து போராடும் விவசாயிகளை இடைத்தரகர்கள் என கொச்சைப்படுத்தியுள்ளார். நீங்கள் விவசாயி அல்ல விஷவாயு. இதற்கெல்லாம் முடிவுக்கட்ட தான் இந்த தேர்தல். தி.மு.கவின் தேர்தல் அறிக்கையை ஜெராக்ஸ் காப்பி எடுத்து அ.தி.மு.க. அறிவிக்கிறது. கூட்டப் பகுதியில் மக்கள் அனைவரும் தயவு செய்து மாஸ்க் அணியுங்கள். கொரோனா தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள். உங்கள் அண்ணனாக கேட்டுக்கொள்கிறேன், தயவு செய்து பாதுகாப்பாக இருங்கள்-என்றார்.



## தமிழகம்–புதுச்சேரியில் நேற்றுடன் நிறைவடைந்த வேட்புமனு தாக்கல்

சென்னை, மார்ச் 20

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் வேட்புமனுத் தாக்கல் நேற்றுடன் நிறைவடைந்தது.

கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான வேட்பு மனுத்தாக்கல் நேற்று பிற்பகல் 3 மணியுடன் நிறைவடைந்தது. தமிழகத்திலுள்ள 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் புதுச்சேரியிலுள்ள 30 தொகுதிகளுக்கும் எதிர்வரும் 6ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. இதேவேளை தமிழகத்தில் 234 தொகுதிகளுக்கு 3 ஆயிரத்து 997 பேர், வேட்புமனுக்கள் தாக்கல் செய்துள்ளனர்.

அதில் 3ஆயிரத்து 332 பேர், ஆண்கள் என்பதுடன் 664 பேர், பெண்களாவர். மற்றும் ஒரு திருநங்கையும் உள்ளடங்குகிறார்.

இந்நிலையில் வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புர்கா தடை விவகாரத்தில் தலையிடுமாறு தென்னாபிரிக்க அமைப்புக்கள் கோரிக்கை

கொழும்பு,மார்ச்.20

இலங்கையில் புர்காவை தடை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து தென்னாபிரிக்காவை தலையீடுமாறு கோரப்பட்டுள்ளது.

இலங்கையில் புர்கா மீதான தடை மற்றும் நூற்றுக்கணக்கான இஸ்லாமிய பாடசாலைகளை மூடும் தீர்மானம் தொடர்பில் உடன் தலையிடுமாறு தென்னாபிரிக்க முஸ்லிம் அமைப்புக்கள், அந்நாட்டின் வெளியுறவு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

தென்னாபிரிக்காவின் ஐக்கிய உலமா கவுன்சில், தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் நலேடி பாண்டேரிடம் இந்த விடயத்தில் தலையிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் பிரதான மற்றும் சமூக ஊடகங்களில் கடுமையான வெறுப்புணர்வின் இலக்காக மாறிவிட்டனர்.

புர்கா மீதான தடை மற்றும் இஸ்லாமிய பாடசாலைகளை மூடுவது என்பது இலங்கையின் பௌத்த பெரும்பான்மையை திருப்திப்படுத்தும் நடவடிக்கையாகும். பெரும்பான்மையினர் வெறுப்பு பிரசாரத்தின் மூலம் குறுங்குழுவாத மற்றும் மத பிளவுகளை ஊக்குவிப்பதில் முன்னேறுகிறார்கள்.

முன்னதாக தென்னாபிரிக்காவின் ஐக்கிய உலமா கவுன்சில், கொரோனா தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடலை அடக்கம் செய்வதற்குப் பதிலாக தகனம் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்தபோது அதற்கு எதிராகவும் இவ்வாறு அழைப்பு விடுத்திருந்தது.

இதேவேளை இலங்கைக்கு எதிரான நடவடிக்கைக்கான அழைப்புக்கு குரல் கொடுத்த தென்னாபிரிக்க முஸ்லிம் நெட்வொர்க், (சாம்நெட்) இஸ்லாமிய பாடசாலைகளை குறிவைப்பது இலங்கை அரசாங்கத்தின் பாசாங்குத்தனம் என்று கூறியுள்ளது

பிற மதக் குழுக்களும் தங்கள் மத போதனைகளை கற்பிக்கும் நிறுவனங்களைக் கொண்டுள்ளன, ஆனால், அவற்றைக் குறிவைக்கும் எந்த முயற்சியையும் இலங்கை அரசாங்கம் எடுக்கவில்லை என்று சாம்நெட் தலைவர் டாக்டர் பைசல் சுலமான் சுட்டிக்காட்டியுள்ளார்.

(எ)

# ஆசிரியர் சங்கங்கள் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 20

பத்தரமுல்லையிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் ஆசிரியர் சங்கங்களால் முன்னெடுக்கப்படும் இரு வேறு ஆர்ப்பாட்டங்களால் அந்தப் பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது.

அரசுக்கு எதிரான வகையில் சங்கமொன்றும், அரசுக்கு ஆதரவான வகையில் மற்றுமொரு சங்கமும் ஒரே இடத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் நிலையிலேயே அமைதியின்மை ஏற்பட்டது.

அதிபர் மற்றும் கல்வி நிர்வாக சேவையில் காணப்படும் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்யுமாறும், அரசியல் நியமனங்களை உடனடியாக நிறுத்துமாறும் வலியுறுத்தி ஜோசப் ஸ்டாலின் தலைமையிலான ஆசிரியர் சங்கங்களின் கூட்டணி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தது.

இதேநேரத்தில், ஒன்றிணைந்து எமது பலத்தைக் காட்டுவோம் என்று அரசுக்கு ஆதரவான பொதுஜன கல்வி சேவைகள் சங்கத்தால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இரண்டு ஆர்ப்பாட்டங்களும் கல்வி அமைச்சுக்கு முன்னால் வீதியில் நடத்தப்பட்ட நிலையில் இரண்டு தரப்பினரும் மோதிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டது.

இதன்போது பொலிஸாரால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

எவ்வாறாயினும் இரண்டு தரப்பினரும் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால் அந்தப் பகுதியூடான வாகனப் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டது.

# பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் முயற்சியை தலைமன்னாரில் இருந்து ஆரம்பித்தார் சியாமளா!






மன்னார், மார்ச் 20

இந்தியாவின் நீச்சல் வீராங்கனையான சியாமளா கோலி தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையான 30 கிலோ மீற்றர் அகலமுடைய பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனை முயற்சியை தலைமன்னாரில் இருந்து நேற்று ஆரம்பித்தார்.

வட மாகாண சபையின் அவைத்தலைவர் சீ. வி.கே. சிவஞானம், வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்து அவரது நீச்சல் பயணத்தை ஆரம்பித்து வைத்தனர். இந்திய - இலங்கை உறவுகளையும், பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையானதும், நெருக்கமானதும் நட்பு ரீதியிலானதுமான உறவினையும் இப்பெருமுயற்சி குறித்து நிற்கின்றது என இலங்கைக்கான இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்னாரிலிருந்து பாக்கு நீரிணையை நீந்தி கடந்து இந்தியாவின் தனுஷ்கோடியை அடைந்து 47 வயதுடைய இந்த நீச்சல் வீராங்கனை சாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நீச்சல் பயணம் வெற்றிகரமாக அமைந்தால் இச்சவால் மிக்க பயணத்தை உலகளவில் வெற்றிகரமாக மேற்கொண்ட இரண்டாவது பெண்ணாகவும், 13ஆவது நீச்சல் வீரராகவும் சியாமளா கோலி திகழ்வார்.

தென்கொரியாவின் குவாஞ்சுவில் நடைபெற்ற 2020 FINA உலகளாவிய வீரர்களுக்கான சுற்றுப்போட்டியில் தெலுங்கானாவை பிரதிநிதித்துவப்படுத்தி சியாமளா கோலி பங்குபற்றியிருந்தார். 2020 நவம்பரில் பட்னாவில் உள்ள 30 கிலோ மீட்டர் அகலமுடைய கங்கை ஆற்றை 110 நிமிடங்களில் நீந்திக் கடந்து ஆறாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

பன்முக ஆளுமைகளைக் கொண்டிருக்கும் சியாமளா கோலி, அனிமேஷன் பட தயாரிப்பாளர், இயக்குனர், எழுத்தாளர் என்ற பல்வேறு ஆளுமைகளை கொண்டவராக விளங்குகிறார். ஹைதராபாத் கசி பௌலி நீச்சல் தடாகத்தில் அவரது பயிற்றுவிப்பாளரான ஆயுஸ் யாதவ் வழிகாட்டலுடன் பாக்கு நீரிணையை கடப்பதற்கான நீச்சல் சவாலுக்குரிய பயிற்சிகளை சியாமளா கோலி பெற்றிருந்தார்.

பாக்கு நீரிணையை நீந்திக் கடக்கும் சாதனையானது சகல பெண்களுக்குமான ஒரு பாரிய சாதனையாக பதியப்படும் என சியாமளா கோலி நம்பிக்கை வெளியிட்டுள்ளார். பெண்களால்முடியாதது எதுவும் இல்லை என்பதனையும் பெண்கள் உயர்ந்த இலக்குகளை நோக்கி பயணிப்பதற்கும் இவ்வாறான விடயங்கள் ஆதரவாக அமையும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(அ)

# ஒப்பரேஷன்....

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்பதுகளின் நடுப்பகுதியில் கிளிநொச்சிப்பகுதியில் கொக்காவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தேசிய தொலைக் காட்சியான ரூபவாஹினியின் அஞ்சல் கோபுரம் தகர்க்கப்பட்ட நிலையில், வடமாகாணத்தில் பரதனால் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சி அஞ்சல் கோபுரம் வாயிலாகவே நிதர்சனம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகியிருந்தன. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான பரதன், பாடசாலை நாட்களின் சதுரங்க விளையாட்டிலும் ஒரு சிறந்த மாணவனாக விளங்கினார்.

இலங்கையிலேயே அதிகளவு பிராந்திய ரீதியாக பத்திரிகைகள் வெளியாகும் மாகாணமாக வடமாகாணம் விளங்குவதோடு, இலங்கையின் முதலாவது பிராந்திய தொலைக்காட்சி என்ற பெருமைக்குரிய வகையில் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் டான் தொலைக்காட்சி சிறப்புற்றிருக்கின்றது.

எதுஎப்படியிருந்த போதிலும், பிராந்திய ரீதியாக இலத்திரனியல் ஊடகத் துறையை நான்கு தசாப்தங்களுக்கு முன்னரேயே உருவாக்குவதில் வெற்றிபெறமுடியும் என்பதனை முதலில் தமது சுய முயற்சியினால் நிரூபித்துக்காட்டியவர், தமது அறுபதாவது வயதில் இருதினங்களுக்கு முன்னர் இவ்வுலக வாழ்வை நீத்த இராஜநாயகம் பரதன் என்பது குறிப்பிடத்தக்கது.

•

# நளின் பண்டாரவின் கருத்திற்கு எதிராக புலனாய்வு பிரிவு பிரதானி முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 20

பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்த கருத்திற்கு எதிராக அரச புலனாய்வுப் பிரிவின் பிரதானி மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, குற்றப்புலனாய்வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து சி.ஐ.டி குழு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நளின் பண்டார தெரிவித்த 4 கருத்துக்களுக்கு எதிராக சுரேஷ் சாலே முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் ஹாஷிமும், மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலேயும் மலேசியாவில் 2019 இல் சந்தித்ததாக நளின் பண்டார தெரிவித்துள்ளார்,

அவர் மலேசியா, இந்தோனேசியா மற்றும் இந்தியாவுக்கு சஹ்ரான் ஹாஷிம் செல்ல வசதி செய்துள்ளார். பயிற்சி பெற்ற பின்னர் அவர் இந்தியாவில் இருந்து நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டார். மேலும் சஹ்ரான் ஹாஷிமின் பல நடவடிக்கைகள் குறித்து சுரேஷ் சாலே அறிந்திருந்தாலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் அவர் வரவழைக்கப்படவில்லை என நளின் பண்டார கூறியுள்ளார்.

நளின் பண்டார கூறிய அனைத்து குற்றச்சாட்டுகளையும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே நிராகரித்ததாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண கூறினார்.

சுரேஷ் சாலேயின் முறைப்பாட்டின் மூலம் தான் சஹ்ரான் ஹாஷிமுடன் சந்திக்கவில்லை என்றும் அவர் மூன்று முறை விசாரணை ஆணைக்குழுவின் முன் ஆஜரானார் என்றும் தெரிவித்துள்ளார்.

நளின் பண்டாரவின் அறிக்கை சமூகங்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தியுள்ளது என்றும், உளவுத்துறையின் நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிடம் கவலைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொள்ளப்படும் என்று அஜித் ரோஹன தெரிவித்தார்.

(அ)

# 2009 இற்கு முற்பட்டதை கதைக்க விரும்பவில்லை!

## யாழில் கூறினார் கெஹெலிய



யாழ்ப்பாணம், மார்ச் 20

**யுத்தம் முடிவடைந்த பின்னர் பல்வேறு திட்டங்களை தாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

வட்டுக்கோட்டையில் புதிய தபாலக கட்டிடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே மைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

224 வருடங்கள் பழைமை வாய்ந்த தபால் சேவை மக்களின் அவசியமான சேவையாக காணப்படுகிறது. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கவலைப்பட்டாலும் 2010 இற்குப் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2009 இற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணமான அரசியல் காரணங்கள் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

யுத்தம் முடிவடைந்த 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.

சுபிட்சத்தை நோக்கு என்ற எமது அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் வடபகுதியிலும் பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் கிராம மட்டங்களிலும் பிரதேச மட்டங்களிலும்இடம்பெற்று வருகின்றன.

கொரோனா காலத்திலும் கூட தபால் சேவையானது மிகவும்சிறப்பாக செயற்பட்டது. அந்த வைரஸ் தொற்று காலத்திலும் கூட எமது தபால் ஊழியர்கள் தமது கடமையை சிறப்பாகச் செயற்பட்டு நாட்டில் சேவையாற்றி இருந்தார்கள்.

யாழ்ப்பாண பிரதேசத்தை பொறுத்தவரை விவசாயம்,கல்வி உயர் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளே மிகமுக்கியமான துறையாக காணப்படுகின்றது. அத்துடன் அந்த துறைகளை அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

மேற்குறிப்பிட்ட துறைகளை ஒன்றிணைத்து முன்னோக்கி செல்வதற்கு பெரும் உதவியாக இருப்பது இந்த தபால்துறை என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன். ஒரு இணைப்பு கருவியாகவே நான் தபால் துறையை காண்கிறேன்.

எம்மை பொறுத்தவரை வட பகுதி அபிவிருத்தி தொடர்பில் எமது அரசாங்கமானது மிகவும் ஆர்வமாக செயற்படுகின்றோம்.

தபால் துறையை நவீனப் படுத்த வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 224 வருடங்கள் பழமை வாய்ந்த தபால்துறையை நவீனமயப்படுத்தி தபால் துறையுள் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி செயற்படுத்தல் தொடர்பில் ஆராய்கிறோம்.

உலக நாடுகளில் உள்ள தபால் துறையை போன்று நமது நாட்டிலும் அதிநவீன வசதிகளைக் கொண்ட வகையில் எமது நாட்டின்தபால் துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம்.

வடபகுதியினை அபிவிருத்தி செய்வதற்கு வடக்கில் உள்ள எமது அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களின் உதவியுடன் எப்போதும் ஒத்துழைப்போம்-என்றார்.





## மக்கள் விடுதலை முன்னணியினரின் அரசியல் கருத்தரங்கு வவுனியாவில்

வவுனியா, மார்ச் 20

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் “வென்றது யார்” என்ற அரசியல் கருத்தரங்கு வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டார்.

குறித்த கருத்தரங்கில் சமகால அரசியல் நிலமைகள் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டிருந்தன.

## ஜெயபுரம் பகுதியில் 133 ஏக்கர் பொதுமக்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி, மார்ச் 20

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஜெயபுரம் பகுதியில் வனவளத்திணைக்களம் கையகப்படுத்தி வைத்திருந்த 133 ஏக்கர் காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10.00மணிக்கு பூநகரி பிரதேச செயலாளர் எஸ்.கிருஸ்ணேந்திரன் தலைமையில் ஜெயபுரம் வடக்கு கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா கலந்து கொண்டு காணிக்கான அனுமதியை மக்களிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட காணி பதில் அரசாங்கதிபர், கிராம சேவையாளர், அரச உத்தியோகத்தர்கள் மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## இரத்தினபுரிப் பகுதி மாணவர்களை குறிவைக்கும் போதை மாபியாக்கள்

கொழும்பு, மார்ச் 20

இரத்தினபுரி மாவட்டத்தில் மாணவர்களை இலக்கு வைத்து மருந்தகங்களில் மூலம் போதைப் பொருள் விற்பனை இடம் பெற்று வருவது குறித்து பாதுகாப்புத் துறை யினர் அவதானத்தை செலுத்தியுள்ளனர்.

திட்டமிட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் போதைப் பொருள் விற்பனை காரணமாக பாடசாலை மாணவர்கள் கிராம தோட்டப்பகுதி இளைஞர்கள் பாதிக்கப்பட்டு வருவதால் இதனைக் கட்டுப்படுத்த இரத்தினபுரி மாவட்ட போதைப்பொருள் பொலிஸ் சுற்றிவளைப்பு பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் போதையை ஏற்படுத்தவல்ல பொருட்களை விற்பனை செய்து வந்த இத்தகைய மருந்தகங்களில் குறுகிய காலத்தில் உடல் உள உயிர் பாதிப்புக்களை ஏற்படுத்தவல்ல மருந்துகள் விற்பனை செய்யப்பட்டு வருவது விசாரணைகளின்போது கண்டறியப்பட்டுள்ளது.

போதைப்பொருளுக்கு பதிலாக சந்தேகங்களை ஏற்படுத்தாத-மாணவர் இளைஞர்களைக் கவரக்கூடிய குளிசை வகைகளை இவர்கள் பயன்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் சில கொடிய நோய்களுக்கு பயன்படுத்தும் குளிசைகள் எனவும், வைத்தியர்களின் சிபாரிசு இல்லாமல் விநியோகிக்க முடியாத இந்த உயிராபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய குளிசை வகைகள் கொள்ளை விலையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கொழும்பில் மீண்டும் அதிகரிக்கும் தொற்றாளர்களின் எண்ணிக்கை

கொழும்பு, மார்ச் 20

கொழும்பில் மீண்டும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக கொழும்பில்அடையாளம்காணப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.

எனினும் கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 313 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டால் நிலைமை மீண்டும் மோசமடையக் கூடும் என சுகாதாரப் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் ஊடக பணிப்பாளராக நிஹால் தல்துவ

கொழும்பு, மார்ச் 20

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிவந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ, பொலிஸ்ஊடகப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தொடர்ந்தும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பதவியில் கடமையாற்றுவார்.

அவர்இதற்கு மேலதிக பொலிஸ் துறையின் சட்டம் ஒழுங்கு பிரிவின் பணிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கூரிய ஆயுதத்தால் பெண் படுகொலை

### தாயும் மகளும் கைது நுவரெலியாவில் சம்பவம்

கொழும்பு, மார்ச் 20

நுவரெலியாவின் திம்புள்ள-பத்தன பகுதியில் தாயும் மகளும் இணைந்து பெண்ணொருவரை கொலை செய்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

கணவனுக்கு இருந்த இரண்டாவது மனைவியையே, முதலாவது மனைவி அவரது மகளுடன் இணைந்து கூரிய ஆயுதத்தால் வெட்டியுள்ளார் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளதாக திம்புள்ள-பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில், திம்புள்ள-பத்தனை பொலிஸ் பிரிவின் கிறேக்கிலி தோட்டம் பொரஸ்கிரிஸ் பிரிவைச் சேர்ந்த விஸ்வநாதம்மா (வயது-42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

கணவரை விட்டு முதலாவது மனைவி பிரிந்த நிலையில், கணவர், இரண்டாவது திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில், நீண்ட காலத்தின் பின்னர், முதலாவது மனைவி கணவர் வீட்டுக்கு மீண்டும் சென்றநிலையில் இந்த விபரீதம் நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், குறித்த குடும்பத்தில் மனைவிமார்களுக்கு இடையில் மிக நீண்ட நாட்களாக சண்டை, சச்சரவு இருந்து வந்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலையை அடுத்து, முதலாவது மனைவி மற்றும் மகள் ஆகியோர் அங்குள்ள காட்டுப் பகுதிக்குள் தப்பிச் சென்றிருந்த நிலையில், பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த பெண்ணின் சடலம் கொட்டகலை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் கொலை தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஈழநாடு



# பிரதமருக்கு டாக்காவில் செங்கம்பள வரவேற்பு

கொழும்பு, மார்ச் 20

பங்களாதேஷிற்கு இரண்டு நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்?ஷ நேற்று காலை பங்களாதேஷின் டாக்காவிலுள்ள ஹஸ்ரத் ஷாஜலால் சர்வதேச விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்ட அதிகாரிகளினால் பிரதமர் வரவேற்கப்பட்டார்.

இரண்டுநாள் உத்தியோக பூர்வ விஜயத்தின்போது பிரதமர், பங்களாதேஷ் குடியரசின் தேசத்தின் தந்தையாக போற்றப்படும் பங்கபந்து ஷெயிக் முஜிபர் ரஹ்மான் அவர்களின் ஜனன தின நூற்றாண்டு விழா மற்றும் பங்களாதேஷின் சுதந்திர பொன்விழா ஆகியவற்றில் கலந்து கொள்கிறார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்?ஷவின் இவ்விஜயத்தின்போது பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, பங்களாதேஷ் ஜனாதிபதி முகமது அப்துல் ஹமீத், பங்களாதேஷ் வெளியுறவுத் துறை அமைச்சர் உள்ளிட்ட பிரமுகர்களுடன் இருதரப்பு பேச்சுக்களில் ஈடுபடவுள்ளார்.




# மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு தயாராகுங்கள்!

## ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு பணிப்பு

கொழும்பு, மார்ச் 20

**மாகாண சபைகளுக்கான தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகுமாறு ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கு அரச உயர்மட்ட தலைவர்களால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.**

மாகாண சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு பழைய முறைமையின்கீழ் தேர்தலை நடத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. இதன்படி ஒக்டோபர் மாதத்துக்கு முன்னர் 9 மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்துவதே அரசின் எதிர்ப்பார்ப்பாக இருக்கின்றது.

இந்நிலையில் ஆளுங்கட்சியின் மாவட்ட தலைவர்களுக்கும், அரச உயர் மட்ட பிரமுகர்களுக்குமிடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது. இதன்போதே தேர்தலுக்கு தயாராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது. குறித்த சந்திப்புக்கு முன்னர் ஆளுங்கட்சியின் மாகாண சபை உறுப்பினர் களையும் உயர்மட்ட தலைவர்கள் சந்தித்து, கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. என்பனவும் தேர்தலை சந்திப்பதற்கான ஆரம்பக்கட்ட பணிகளை ஆரம்பித்துள்ளன. வேட்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அரச பங்காளிக்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் விண்ணப்பங்களைக்கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சட்டமா அதிபர் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இல்லம் மன்னாரில்

மன்னார், மார்ச் 20

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, பெரியகமம் பகுதியில் அமைக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்னார் பிராந்திய உத்தியோகபூர்வ இல்லம் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிர்வாகப் பிரிவின் தலைவர் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தனவின் அழைப்பில் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேரா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தின் மன்னார் மாவட்ட உத்தியோகபூர்வ இல்லத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், சட்டமா அதிபர் திணைக்கள உத்தியோகஸ்தர்கள், நீதிபதிகள், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மெல், பொலிஸார், இராணுவ அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜாவால் சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேராவுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

(அ)

# மாகாண சபைத் தேர்தலை எதிர்கொள்ள நாங்கள் தயார்!

## சஜித் அணி அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 20

மாகாண சபைத் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. இதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு பிரசாரத்திற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

ஐக்கிய மக்கள் சக்தி மாகாண சபைத் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்குத் தயாராகவுள்ளது. தேர்தலுக்கான விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக பல விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும், தேர்தலில் எவ்வாறானவர்கள் களமிறக்கப்பட வேண்டும் என்பது தொடர்பான திட்டமிடலொன்று உள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில், இலக்கொன்றுடன் பயணிக்கின்றோம். நேரடியாக தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், தேர்தல் பிரசாரம் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள சகல தீர்மானங்களையும் ஊடகங்களுக்கு வெளிப்படுத்த முடியாது - என்றார்.

(அ)





# வட்டுக்கோட்டை அஞ்சல் அலுவலகம் தபால்துறை அமைச்சரினால் திறப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 20

11.6 மில்லியன் ரூபா நிதியில் புதிதாக கட்டப்பட்ட வட்டுக்கோட்டை அஞ்சல் அலுவலகம் நேற்றுக் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது

வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி மதுமதி வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த அஞ்சல் அலுவலக திறப்பு நிகழ்வில் அஞ்சல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அஞ்சல் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஊடகம், தபால்துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஜெகவீர, பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் மற்றும் வடக்கு மாகாண தபால் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்பட்டார் ரோஹித!

கொழும்பு, மார்ச் 20

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கிலிருந்து அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன விடுவிக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மீதான விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே அவர் குறித்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

(அ)

# கமல்ஹாசன்: நடிகர் முதல் அரசியல்வாதி வரை ஒரு "தசாவதாரம்"



முரளிதரன் காசிவிஸ்வநாதன்

ஆறு வயதில் தொடங்கி தற்போதுவரை 220க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்திருக்கும் கமல்ஹாசன், நடிகர் என்ற வகையில் நான்கு தேசிய விருதுகள், தயாரிப்பாளராக ஒரு தேசிய விருது, பத்துக்கும் மேற்பட்ட தமிழக அரசின் விருதுகள் ஆகியவற்றைப் பெற்றவர். இந்திய அரசு வழங்கும் உயரிய சிவிலியன் விருதுகளான பத்மசிறி, பத்மபூஷண் பட்டங்களையும் பெற்றவர். தென்னிந்திய மொழித் திரைப்படங்கள் தவிர, இந்தி, வங்க மொழிப் படங்களிலும் நடித்திருக்கிறார் கமல்ஹாசன்.

ஆனால், 2018இல் அவர் புதிதாக அரசியல் கட்சி ஒன்றைத் தொடங்கி தேர்தலைச் சந்தித்து கணிசமான வாக்குகளைப் பெற்றாலும் குறிப்பிடத்தக்க வெற்றி எதையும் பெறவில்லை. இருந்தபோதும் தற்போது அடுத்த தேர்தலுக்குத் தயாராகியிருக்கிறார் கமல்ஹாசன்.

பரமக்குடியில் பிறந்து சென்னையில் வளர்ந்து, திரையுலகில் வெற்றிக்கொடி நாட்டிய கமல் தற்போது கோவை தெற்குத் தொகுதியில் வாக்குகளைக் கோரி வருகிறார். அவருடைய அரசியல் பயணம் மிகக் குறுகியது என்றாலும், திரையுலகப் பயணம் அசாத்தியமானது.

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடியின் பிரபல வழக்கறிஞர் சீனிவாசன். இவரது மனைவி ராஜலட்சுமி. இந்தத் தம்பதிக்கு ஏற்கனவே சாருஹாசன், சந்திரஹாசன், நளினி என மூன்று குழந்தைகள் இருக்க, நான்காவது மகனாக 1954ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி பிறந்தார் கமல்ஹாசன்.

பள்ளிப்படிப்பு பரமக்குடியில் தொடங்கியது. பிறகு தன் அண்ணன் சாருஹாசனுடன் சென்னைக்குக் குடிபெயர்ந்தார் கமல். இந்தத் தருணத்தில்தான் ஏ.வி.எம். ஸ்டுடியோ அதிபர் ஏ.வி. மெய்யப்பச்செட்டியாரின் கண்ணில்படவே, களத்தூர் கண்ணம்மா படத்தில் ஒப்பந்தமானார் கமல்.

1960இல் ஜெமினி கணேசன் - சாவித்ரி நடிப்பில் வெளிவந்த இந்தத் திரைப்படம் பெரும் வெற்றிபெற்றது. இந்தப் படத்தில் நடித்ததற்காக அந்த ஆண்டின் சிறந்த குழந்தை நட்சத்திரத்திற்கான விருது கமலுக்கு வழங்கப்பட்டது.

அடுத்தடுத்து படங்களிலும் நடிக்க ஒப்பந்தமானார் கமல். களத்தூர் கண்ணம்மாவிற்குப் பிறகு, பார்த்தால் பசி தீரும், பாத காணிக்கை, கண்ணும் காலும் (மலையாளம்), ஆனந்த ஜோதி, வானம்பாடி ஆகிய படங்களில் நடித்தார். 1960 இல் குழந்தை நட்சத்திரமாகத் தொடங்கிய அவரது சினிமா பயணம், 63 இல் முடிவுக்கு வந்தது.

## திரையுலகில் கிடைத்த 'பிரேக்'

பிறகு, திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளியில் தன் படிப்பைத் தொடர்ந்தார் கமல். அங்கு எட்டாம் வகுப்புவரை முடித்த பிறகு, புரசைவாக்கம் எம்.சி.டி. முத்தையா செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பில் சேர்ந்தார். பதின்ம வயதை எட்டியிருந்த கமலின் ஆர்வம் முழுக்க நடிப்பின் மீதே இருக்க டி.கே.எஸ். நாடகக் குழுவில் சேர்ந்தார் அவர். அதே நேரத்தில் நடன வகுப்பிலும் சேர்ந்தார். படிப்பு பத்தாம் வகுப்போடு நின்று போனது.

இதற்குப் பிறகு தன் நண்பர்களுடன் சேர்ந்து சிவாலயா என்ற நடனக் குழுவைத் தொடங்கினார் கமல். ஆனால், சில மாதங்களிலேயே நடனக்குழு கலைந்துவிட்டது. அந்தத் தருணத்தில் நடிப்பதற்கான வாய்ப்புகளும் கிடைக்கவில்லை. இந்த நிலையில், தமிழ் சினிமாவில் முன்னணி நடன வடிவமைப்பாளராக இருந்த தங்கப்பன் மாஸ்டரிடம் உதவியாளராகச் சேர்ந்தார் கமல்.

இதற்குப் பிறகு 1970 இல் தேவர் பிலிம்ஸ் தயாரித்த மாணவன் படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியதன் மூலம் மீண்டும் திரையில் தோன்றினார் கமல். அதற்குப் பிறகு, அன்னை வேளாங்கண்ணி, குறத்தி மகன் படங்களில் சிறிய வேடங்களில் நடித்த கமலுக்கு, அரங்கேற்றம், சொல்லத்தான் நினைக்கிறேன் படங்களின் மூலம் 'பிரேக்' கொடுத்தார் இயக்குனர் பாலச்சந்தர்.

இதற்குப் பிறகு மளமளவென பட வாய்ப்புகள் கமலுக்கு வந்து குவிந்தன.

தமிழில் மட்டுமல்லாமல் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய படங்களிலும் தொடர்ச்சியாக நடிக்க ஆரம்பித்தார் அவர். 74 இல் வெளிவந்த அவள் ஒரு தொடர் கதை, 75 இல் வெளிவந்த அபூர்வ ராகங்கள் ஆகியவை கமல்ஹாசனுக்கு தனித்த அடையாளத்தை அளித்தன. இதற்குப் பிறகு திரும்பிப்பார்க்கவே நேரமில்லாத அளவுக்கு படங்களை நடித்துக் குவித்தார் கமல்.

மலையாளத்தில் மட்டும் 35க்கும் மேற்பட்ட படங்களிலும் 15க்கும் மேற்பட்ட இந்திப் படங்களிலும் நடித்திருக்கிறார் கமல். ஏழுக்கும் மேற்பட்ட படங்களுக்கு கதை, மூன்று படங்களுக்கு கதை - திரைக்கதை, இரண்டு படங்களுக்கு திரைக்கதை - வசனம், சுமார் பத்து படங்களுக்கு திரைக்கதை, எட்டுக்கும் மேற்பட்ட படங்களுக்கு நடன ஆசிரியர், நான்கு படங்களுக்கு இயக்குனர், 70க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியவர், திரைப்பட பாடலாசிரியர் என திரையுலகின் பல துறைகளிலும் கால்பதித்து சாதனை படைத்தவர் கமல்.

## அரசியலை நோக்கிய மன மாற்றம்

ரஜினியும் கமல்ஹாசனும் வெற்றிகரமாக நடித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில் நடிகராக இருந்து அரசியலில் இறங்கி எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தார். ஆகவே, வெற்றிகரமான அடுத்த தலைமுறை நடிகர்களான கமலும் ரஜினியும் எம்.ஜி.ஆரைப் போல அரசியலில் ஈடுபடுவார்களா என்பது தவிர்க்க முடியாத கேள்வியாக இருந்துவந்தது.

தொண்ணூறுகளின் மத்தியப் பகுதியிலிருந்து இந்தக் கேள்விகளுக்கு மறைமுகமாக ரஜினிகாந்த் தீனிபோட்டுவந்தாலும், கமல் அதிலிருந்து விலகியே இருந்தார். ஆனால், முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா இறந்து, எதிர்க்கட்சி தலைவரும் தமிழகத்தின் மூத்த அரசியல்வாதியுமான மு. கருணாநிதியும் செயலிழந்த நிலையில் இருந்தபோது, கமல்ஹாசனிடம் மனமாற்றம் ஏற்பட்டிருக்கக்கூடும்.

ரஜினிகாந்த்தைப் பொறுத்தவரை சமீப காலத்தில்தான் அரசியலைப் பற்றி நேரடியாகப் பேசினார் என்றாலும் அவர் தன் திரைப்படங்களின் மூலம் தன் அரசியல் பிரவேசம் குறித்த கருத்துகளை நீண்ட காலமாகவே தெரிவித்துவந்ததாக அவரது ரசிகர்கள் கருதினார்கள். அவரும் அதற்கேற்றபடி பூடகமான அரசியல் கருத்துகளைத் தெரிவித்துவந்தார். ஆனால், கமல்ஹாசன் சமீப சில ஆண்டுகளுக்கு முன்புவரை அரசியல் தொடர்பாக எதையும் பேசியவரில்லை.

சில பத்தாண்டுகளுக்கு முன்பாக ஆனந்த விகடன் இதழுக்கு அளித்த ஒரு பேட்டியில், நீங்கள் அரசியலுக்கு வருவீர்களா எனக் கேள்வியெழுப்பப்பட்டபோது, 'தான் அரசியலுக்குப் பொருத்தமானவரில்லை" என்று பதிலளித்திருந்தார். தினத்தந்தி நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில், ரஜினிகாந்த் அரசியலுக்கு வந்து, எனக்கு தோள் கொடுங்கள் என்று அழைத்தால் அரசியலுக்கு வருவீர்களா என்று கேட்டபோது, 'அரசியலுக்கு வர மாட்டேன் என்பதை ஏற்கனவே சொல்லிவிட்டேன்" என்று பதிலளித்தார் கமல். ஆனால், காலம் வேறு கணக்குகளை வைத்திருந்தது.

## விஸ்ரூபத்தில் வந்த பிரச்னைகளும் கமல் எடுத்த அவதாரமும்

2013ஆம் கமல் நடித்து வெளிவந்த விஸ்வரூபம் திரைப்படத்தை வெளியிடுவதில் பிரச்னை ஏற்பட்டபோது, அவர் வெளிப்படையாக பேச ஆரம்பித்தார். 2013ஆம் ஆண்டு ஜனவரி 25ஆம் தேதி படம் வெளியாகுமென அறிவிக்கப்பட்ட நிலையில், இஸ்லாமியர்களுக்கு எதிரான அவதூறான காட்சிகள் இருப்பதால் படத்தை வெளியிடக்கூடாது என இஸ்லாமிய அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்தன. அந்தப் படத்துக்கு தமிழ்நாடு அரசு 15 நாட்கள் தடை விதித்தது.

இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய கமல்ஹாசன், "தமிழ்நாடு அரசு விஸ்வரூபம் படத்திற்கு தடை விதித்து இருப்பது என்னை மட்டுமல்ல. நாட்டையே அவமதிக்கும் செயல். மிரட்டல் தொடர்ந்தால் நாட்டைவிட்டு வெளியேறுவது பற்றி பரிசீலிப்பேன்" என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பிறகு, கமல்ஹாசனும் இஸ்லாமிய அமைப்புகளும் சந்தித்துப்பேசிய பிறகு, பிரச்னை ஒருவாறு முடிவுக்கு வந்தது. சில காட்சிகள் நீக்கப்பட்டு, அதே ஆண்டு பிப்ரவரி 7ஆம் திகதி படம் வெளியானது. இதற்குப் பிறகு மீண்டும் திரைப்படங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்த கமல்ஹாசன், 2017ஆம் ஆண்டில் பிக் பொஸ் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க ஆரம்பித்தார். அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கும்போது, நடப்பு அரசியலைக் குறித்தும் சிலவற்றைப் பேசினார். இது கொஞ்சம் கொஞ்சமாக பரபரப்பை ஏற்படுத்த ஆரம்பித்தது. ஊழல் புகார்களைச் சுமத்தினார். இதையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு அமைச்சர்கள், 'ஊழல் நடந்ததற்கான ஆதாரங்களைத் தெரிவிக்க வேண்டும். அரசைப் பற்றி அவதூறாகப் பேசினால் வழக்குப் பதிவு செய்யப்படும்" என்று தெரிவித்தனர். இதற்குப் பதிலளித்த கமல்ஹாசன், 'அரசு நிர்வாகத்தின் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளை அந்தந்த துறை அமைச்சர்களின் மின்னஞ்சல் முகவரியில் பதிவுசெய்யுங்கள்" என தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்தார். இதையடுத்து, தமிழக அரசின் இணையத்தளத்தில் இருந்த அமைச்சர்களின் மின்னஞ்சல் முகவரிகள் அகற்றப்பட்டன.

இருந்தபோதும் கமல் அரசியல் குறித்துப் பேசுவதும் அதற்கு அமைச்சர்கள் குறிப்பாக டி. ஜெயக்குமார் பதிலளிப்பதும் வாடிக்கையாகிப்போனது. இந்த நிலையில், விரைவிலேயே அரசியல் கட்சி ஒன்றைத் துவங்கப் போவதாக அறிவித்தார் கமல்ஹாசன்.

## கட்சி தொடங்கிய கமல்ஹாசன்

அதன்படி, 2018ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ஆம் திகதி மதுரையில் ஒரு பிரமாண்டமான கூட்டத்தை நடத்திய கமல்ஹாசன், மக்கள் நீதி மய்யம் என்ற பெயரில் அரசியல் கட்சி ஒன்றைத் துவங்கினார். இந்தக் கட்சியின் தொடக்க விழாவில் டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். திரையுலகில் கமல்ஹாசனின் சக நடிகர்களாக இருந்த ரஜினிகாந்தும் கமல் ஹாசனும் கிட்டத்தட்ட ஒரே காலகட்டத் தில் அரசியலுக்கு வருவதாக அறிவித்தனர். 2017ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி ரசிகர்கள் மத்தியில் பேசிய ரஜினிகாந்த் அரசியலுக்கு வரப்போவதாக அறிவித்தார். ஆனால், அந்த திசையில் அவர் தொடர்ந்து பயணிக்கவில்லை. ஆனால், 2017ஆம் ஆண்டின் மத்தியில் தனது அரசியல் பய ணம் குறித்து பூடகமாகப் பேச ஆரம்பித்த கமல், கட்சி தொடங்கி, அடுத்து வந்த பாரா ளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டார்.

2019ஆம் ஆண்டில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட மக்கள் நீதி மய்யம் ஒரு இடத்தையும் வெல்லவில்லை என்றாலும் சுமார் 15 லட்சத்து 75 ஆயிரம் வாக்குகளைப் பெற்றது. சில தொகுதிகளில் மூன்றாவது இடத்தையும் வட சென்னை, தென் சென்னை மற்றும் மத்திய சென்னை ஆகிய மூன்று தொகுதிகளிலும் 10 சதவீதத்துக்கு மேலான வாக்குகளையும் பெற்றது அந்தக் கட்சி. ஆனால், கமல் கட்சி தொடங்கியதிலிருந்து அவரது கொள்கை எதனை அடிப்படையாக வைத்தது என்ற குழப்பம் நீடித்துக் கொண்டே இருக்கிறது. கட்சி தொடங்கிய தருணத்தில் கட்சியின் கொள்கை குறித்துப் பேசியபோது "என்னுடைய கொள்கை இடதுமல்ல, வலதுமல்ல, மையத்தில் இருப்போம்" என்றார். அதன் பொருள் பலருக்கும் விளங்கவில்லை.

"பிக் பொஸ்" நிகழ்ச்சியில் பேசும்போது 'விந்திய மலைக்கு இந்தப் பக்கம் இருக்கும் தென்னிந்தியா சுயமரியாதை இந்தியா" என்று பேசி திராவிடக் கட்சியினரை உற்சாகப்படுத்தினார். திடீரென 'கறுப்புக்குள் காவியும் அடக்கம்' என்று சொல்லி அதிரவும் வைத்தார். மதுரையில் கட்சி தொடங்கிய தினத்தில் 'ஊழல்தான் எல்லா தீமைகளுக்கும் காரணம் என்பதால் அதை ஒழிப்பதற்கே முன்னுரிமை" என்றும் 'நல்ல தரமான கல்வி எல்லோருக்கும் கிடைக்கப் பாடுபடுவேன்" என்றும் 'சாதி மதம் அறவே நீக்கப்படும்" என்றும் பேசினார் கமல். இலவசம் கிடையாது என்றார். இதற்குப் பிறகு, கமல்ஹாசனின் பேச்சுகளில் ஊழல் ஒழிப்பு என்ற அம்சமே பிரதானமான விஷயமாக இடம்பெற்று வருகிறது. செய்தியாளர் சந்திப்புகள், அவரது ட்விட்டர் பக்கம் ஆகியவற்றில் பூடகமான முறையில் கமல் தெரிவிக்கும் கருத்துகள் அவரை முழுமையாக கணிக்க முடியாமல் வைத்திருக்கின்றன. ஆனால், தேர்தல் பிரசாரத்தில் இதே போன்ற பூடமான முறையில் பேசுவது வாக்காளர்களிடம் எடுபடுமா என்பதை வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் எதிரொலிக்கும்.

## சொந்த வாழ்க்கை

கமல்ஹாசன் இரு முறை திருமணம் செய்திருக்கிறார். மேல் நாட்டு மருமகள் படத்தில் நடித்தபோது சந்தித்த வாணி கணபதியை 1978 இல் திருமணம் செய்தார். இதற்கு சில ஆண்டுகளிலேயே இருவரும் விவாகரத்து செய்தனர். இதற்குப் பிறகு பொலிவுட் திரைக்கலைஞரான சரிகாவை திருமணம் செய்தார் கமல். இந்தத் தம்பதிக்கு ஸ்ருதி, அக்?ஷரா என இரு மகள்கள் உண்டு. சில ஆண்டுகளில் இருவரும் பிரிந்துவிட்ட நிலையில், திரைக் கலைஞர் கௌதமியுடன் இணைந்து வாழ்ந்தார் கமல். தற்போது இருவரும் பிரிந்துவிட்டனர்.

# சீனாவை எதிர்க்க விரும்பாத தமிழ்த் தேசிய தலைமைகள்

யதீந்திரா





இலங்கை தொடர்பான புதிய பிரேரணையின் இறுதி வரைவு, மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. அடுத்த வாரம் இது தொடர்பான இறுதி விவாதங்கள் இடம்பெறவுள்ளன. இந்த விவாதங்களின்போது, இலங்கையை பாதுகாக்கும் தலைமைப் பொறுப்பை சீனா எடுத்துக் கொள்ளும். ஏற்கனவே இது தொடர்பில் சீனா பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

இலங்கையின் மீது புதியதொரு பிரேரணை என்னும் வாதம் மேலொழுந்த நாளிலிருந்து சீனா மிகவும் உறுதி யான நிலையில் அதனை எதிர்த்து வந்திருக்கின்றது. இந்த விவகாரம் இலங்கையின் உள்விவகாரம். எனவே இதில் வெளியார் தலையீடு செய்ய வேண்டியதில்லை. இலங்கையை நாங்கள் நம்புகின்றோம். அதன் உள் விவ காரங்களை கையாளும் திறன் அதற்குண்டு - இலங்கை யின் விவகாரத்தில் சீனாவின் நிலைப்பாடு இதுதான்.

மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக கிடையிலான உள்ளார்ந்த கலந்துரையாடல்களில் பங்குகொள்ளும் ஒரு நண்பர் என்னுடன் பேசுகின்ற போது, ஒரு முக்கியமான விடயத்தை குறிப்பிட்டிருந் தார். அதாவது, மனித உரிமை விழுமியங்களை முதன்மைப்படுத்தும் மேற்குலக நாடுகளும், அதனை முற்றிலுமாக எதிர்த்துநிற்கும் எதிர்-தாராளவாத முகாமிற்கு தலைமை தாங்கும் சீனாவும் எவ்வாறு மோதிக் கொள்கின்றன என்பது தொடர்பில் அவர் குறிப்பிட்டிருந்தார். சீனா எந்தளவிற்கு இந்த விடயங்களில் தலையீடு செய்கின்றது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இங்கு, முக்கியமாக கவனிக்கவேண்டி ஒரு விடயமுண்டு. அதாவது, இலங்கையின் ஒரு தேசிய இனமான தமிழர் தங்களுக்கான நீதியை மேற்குலக தாராளவாத நாடுகளிடமிருந்தே எதிர்பார்க்கின்றனர். ஏனெனில் மேற்குலக தாரளவாத நாடுகள் மட்டும்தான் உலகளாவிய மனித உரிமைகள் நிலைமைகள் மீது கரிசனை கொண்டிருக்கின்றன. ஏனெனில் மனித உரிமைச் சிந்தனை என்பதே தாராளவாத அரசியல் முறைமையின் ஒரு அங்கம்தான். மனித உரிமைச் சிந்தனையும் ஜனநாயகமும் தாராளவாத அரசியலின் இரு கண்களாகும். அரசியல் அதிகாரம், தாராளவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற நாடுகளில் மட்டும்தான், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பில் முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியும்.

உதாரணமாக சீனாவில் மனித உரிமைகள் ஜனநாய கம் தொடர்பில் விவாதிக்க முடியாது ஏனெனில் சீனாவின் அரசியல் கட்டமைப்பு அடிப்படையிலேயே ஜனநாயக விழுமியங்களுக்கு எதிரானது. இந்த பின்புலத்தில் பார்த்தால், இலங்கை விடயத்தில், தமிழர்களின் மேற்குலகம் நோக்கிய கோரிக்கையை பலவீனப்படுத்துவதே சீனாவின் பிரதான இலக்காக இருக்கின்றது. தமிழர்கள் இலங்கையின் உள்ளக கட்டமைப்புக்களில் எங்களுக்கு நம்பிக்கையில்லை என்னும் அடிப்படையில்தான் மேற்குலக நாடுகளின் தலையீடுகளை கோரிவருகின்றனர்.

முக்கியமாக அமெரிக்காவின் தலையீட்டை கோருகின்றனர். அதே வேளை, ஒரு நியாயமான அரசியல் தீர்விற்காக, தமிழர் தரப்பு, இந்தியாவின் தலையீட்டையும் கோருகின்றது. ஆனால் மறுபுறமாக - இலங்கையை நம்பலாம், இலங்கையின் உள்விவகாரங்களில் வெளியார் தலையீடு செய்யக் கூடாது, அதனை சீனா ஒரு போதும் பார்த்துக் கொண்டிருக்காது என்றவாறான பிரச்சாரங்களை சீனா சர்வதேசளவில் மேற்கொண்டு வருகின்றது.

இந்த இடத்தில் தமிழர்களின் மனித உரிமை மற்றும் ஜனநாயகரீதியான கோரிக்கைகளுடன் சீனா நேரடியாக மோதுகின்றது. இது தொடர்பில் இதுவரையில் எந்தவொரு தமிழ்த் தேசிய கட்சியும் வாய்திறந்த தில்லை. ஏன்? ஆமெரிக்காவின், இந்தியாவின் தலையீட்டை கோருகின்ற தமிழ் தலைமைள், ஏன் மேற்குலக தலையீடுகளை எதிர்த்துவரும், சீனாவின் குறுக்கீடுகளை எதிர்க்கவில்லை? இதற்கு பின்னாலுள்ள அரசியல் என்ன? வாய்ப்பு கிடைத்தால் சீனாவுடனும் ஒட்டிக் கொள்ளலாமென்று தமிழ்த் தலைமைகள் கருதுகின்றனவா?

தென்னிந்தியாவின் ராமேஸ்வரத்திற்கு மிகவும் நெருக்கமாக இருக்கும் யாழ்ப்பாணத்தின் மூன்று தீவுகளில், மின்உற்பத்தி திட்டமொன்றிக்காக, சீன நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியமை தொடர்பில் இந்தியா தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தது. இந்தியாவின் தேசிய பாதுகாப்பை எவ்வாறு உறுதிப் படுத்திக்கொள்ளவேண்டுமென்று இந்தியாவிற்கு தெரியும். ஒரு பிராந்திய சக்தி, அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பல்வேறு வழிகளை கையாளக் கூடிய திறனைக் கொண்டிருக்கும். அது சாம, தான, பேத, தண்டம் என்றவாறான அணுகுமுறைகளை உள்ளடக்கியிருக்கும். நிச்சயமாக ஈழத்தமிழ் தலைமைகள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு தேவை யில்லை. இதுதான் யதார்த்தம் - என்றாலும் கூட, இந்தியாவிடமிருந்து ஆதரவை கோரிவரும் தமிழ் தலை மைகள், இந்தியாவின் நலன்கள் மீதான கரிசனையை காண்பிக்க வேண்டியது ஒரு தார்மீகக் கடமையா கும்.

இது இயல்பானதும் கூட. நாம் எந்த நாடுகளின் உதவிகளை கோருகின்றோமோ, அந்த நாடுகளின் நலன்கள் தொடர்பில் எங்களுக்கும் கரிசனை இருக்க வேண்டியது அவசியமாகும். நாம் எமது தார்மீக கடமையை செய்துகொண்டு குறித்த நாடுகளிடம் சில விடயங்களை எதிர்பார்கும்போது, நாம் சில விடயங் களை சற்று கூடுதல் உரிமையுடன் கேட்க முடியும். ஆனால் தமிழ்ச் சூழலில் அவ்வாறான அணுகுமுறையை ஒரு போதுமே காணமுடியவில்லை.

தேர்தலில் தோல்வியடைந்த ஒரு சில அரசியல்வாதிகள் இது தொடர்பில் அவ்வப்போது பேசுகின்றனரே தவிர, தமிழ் மக்களின் பிரதான தலைமையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இவ்வாறான விடயங்கள் தொடர்பில் தங்களின் உத்தியோகபூர்வமான நிலைப்பாட்டை வெளியிடுவதில்லை. புவிசார் அரசியல் தொடர்பில் பேசும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சீனா தொடர்பில் தவறியும் வாய் திறந்ததில்லை.ஏன்?

அண்மையில், கூட்டமைப்பின் சிரேஷ்ட தலைவர் ஒருவரிடம் இது தொடர்பில் வினவியிருந்தேன். ஏன் நீங்கள் சீனா தொடர்பில் வாய்திறப்பதில்லை? நீங்கள் மேற்குலக தூதரகங்களில்தான் தஞ்சமடைகின்றீர்கள். அவர்களின் உதவியை கோருகின்றீர்கள். ஆனால் மேற்குலகு தலைமை தாங்கும், தாராளவாத உலக ஒழுங்குக்கு  சவால்விடும் சீனா, தொடர்பில் நீங்கள் ஏன் வாய்திறக்க அஞ்சுகின்றீர்கள்? இதற்கு அவர் வழங்கிய பதில் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு வேளை நாளைக்கு சீனாவிடமும் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டால் என்ன செய்வது? இரா.சம்பந்தனும் இந்தக் கருத்துப்பட அண்மையில் பேசியவர் என்றார். சீனாவையும் கண்டு வைத்தால் பிரயோசனமாக இருக்குமா? - இவ்வாறு சம்பந்தன் கேட்டதாக அவர் தெரிவித்தார். அவரது கருத்தும் அப்படியாகத்தான் இருந்தது. இப்போது நாங்கள் அவசரப்பட்டு சீனாவை எதிர்த்துவிட்டு, ஒரு வேளை, நாளைக்கு அவர்களிடமும் போக வேண்டிய நிலைமையேற்பட்டுவிட்டால் நிலைமைகள் சிக்கலாகிவிடலாமல்லவா? சம்பந்தனின் இவ்வாறான புரிதலுக்கும், தற்போது இலங்கை வெளி விவகார அமைச்சர், மியன்மார் இராணுவ அரசாங்கத் தின் வெளிவிவகார அமைச்சருக்கு அழைப்புவிட்டி ருப்பதற்குமிடையில் பெரிய வேறுபாடில்லை.

இன்றைய தாராளவாத உலக ஒழுங்கிற்கு சீனாவை விடவும், வேறு எந்தவொரு பிரதான சவாலுமில்லை. சோவியத்தின் வீழ்ச்சிக்கு பின்னர், தற்போது சோவியத்தின் இடத்தை சீனா மெதுவாக எடுத்துக் கொண்டிருக்கின்றது. இன்றைய சர்வதேச அரசியல் பரப்பில் இதுதான் பிரதான அரசியல் விவாதம். உண்மையில் இது தொடர்பில் எந்தவிதமான புலமையோ அனுபவமோ சம்பந்தனைப் போன்றவர்களிடம் இல்லை.

அதே வேளை கூட்டமைப்பிலுள்ள ஏனையவர்களிடமும் இல்லை. இருந்திருந்தால் சீனாவை கண்டுவைப்பது பயன்தருமா என்றவாறான ஒரு கேள்வியை சம்பந்தன் கேட்டிருக்கமாட்டார். தமிழ் அரசியலிலுள்ள பலவீனமான பக்கம் இதுதான். தமிழ் அரசியலில் உள்ள ஒரு சிலரும் கூட, விடயங்களை சட்டக் கண்கொண்டு பார்ப்பவர்களாகவே இருக்கின்றனர். மனித உரிமைகள் விவகாரத்தில் தாராளவாத சக்திகளும் எதிர்-தாராளவாத சக்திகளும் எவ்வாறு மோதிக் கொள்கின்றன என்பது தொடர்பில் ஒரு தெளிவான புரிதல் இருந்திருந்தால், சீனாவிடம் போவதால் நன்மை வருமா என்னும் கேள்விக்கான அவசியமே ஏற்பட்டிருக்காது.

சீனாவின் தற்போதைய ஜனாதிபதி, ஒரு வாழ்நாள் ஜனாதிபதியாக இருக்கின்றார். மேற்குலக தாராளவாத உலக ஒழுங்கில் சீனாவால் எக்காலத்திலும் ஒரு உறுப்புநாடாக இருக்க முடியாது. இதன் காரணமாகத்தான் சட்டத்தினடிப்படையிலான உலக ஒழுங்கின் முதல் எதிரியாக சீனா கணிப்பிடப்படுகின்றது. அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உலகளாவிய முறுகல் நிலைதான் இனிவரப்போகும் உலக அரசியலை தீர்மானிக்கப் போகின்றது?

இந்த நிலையில் மேற்குலக தலையீடுகளை குறிப்பாக அமெரிக்காவின் பைடன் நிர்வாகத்தின் தலையீட்டை கோரும், தமிழ் தலைமைகள், முதலில் தாராளவாத உலக ஒழுங்கிற்குள் தாங்கள் இருக்கின்றார்களாக என்பதை நிரூபிக்க வேண்டியிருக்கின்றது. அதனை நிரூபிக்க வேண்டுமாயின், முதலில் இலங்கை விடயத்தில் சீனா மேற்கொண்டுவரும் தீர்மானங்கள் தொடர்பான தங்களின் உத்தியோகபூர்வமான நிலைப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டும். கூழுக்கும் மீசைக்கும் ஆசைப்படும், அரசியல் அணுமுறைகள் ஒருபோதுமே தமிழர்களுக்கு கைகொடுக்காது.

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

**20**

**2019 - 18**

**01D .** இக் கேள்வி கூடுகளினுள்ளே் இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும். உருக் கோலத்தினைக் கருதுங்கள்.கவனியுங்கள்.
இங்கு மூன்று கிடை நிரல்கள் தரப்பட்டுள்ளன.இவற்றை முறையே 1ம்/2ம்/3ம் நிரல்கள் என்போம். 1ம்/2ம் நிரல்களிலுள்ள கூறுகளைப் பயன்படுத்தி 3ம் நிரலிலுள்ள உரு பெறப்பட்டிருக்கும்.1வது கிடை வரிசையில் கம்பு ஒன்று நீக்கப்பட்டு அடுத்த பெட்டியில் சேர்க்கப்பட்டு வந்துள்ளது. 1ம் கிடை வரிசையில் இரண்டாவது பெட்டியில் மேலும் ஒரு கம்பு ஒன்று நீக்கப்பட்டு 3ம் பெட்டியின் கோலம் வந்துள்ளது. 2வது கிடை வரிசையில் இதே விளக்கத்தைக் காணலாம். இதன்படி 3வது கிடை வரிசையில் வெற்றுப் பெட்டியில் வரவேண்டியது உரு 3 இல் உள்ள கோலமாகும். அதற்குரிய சரியான **விடை 03**

**2019 - 19**

**01D**. கூடுகளினுள்ளே் இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப வெற்றுக் கூட்டிற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல்
**A**.வட்டத்தினுள் முக்கோணம் **B.** முக்கோணத்தினுள் சதுரம்
**C**. சதுரத்தினுள் வட்டம் தரப்பட்டுள்ளது.
1ம்/ நிலைக்குத்து நிரலில் **A**.வட்டத்தினுள் முக்கோணம்
**B.** முக்கோணத்தினுள் சதுரம் **C**. சதுரத்தினுள் வட்டம் தரப்படடுள்ளது.
2ம் நிரலில் **B** முக்கோணத்தினுள் சதுரம் **C**. சதுரத்தினுள் வட்டம் **A**.வட்டத்தினுள் முக்கோணம் தரப்பட்டுள்ளது.
**B.** 3ம் நிரலிலுள்ள உருவில் வரக்கூடிய கோல ஒழுங்கு
மேலே **C**. சதுரத்தினுள் வட்டம் கறுப்பு முக்கோணம்
நடுவில் **A.**வட்டத்தினுள் முக்கோணம்
எனவே கீழே **B** முக்கோணத்தினுள் சதுரம் வரவேண்டும்.
அதற்குரிய சரியான **விடை 01**

**2020 - 03**

**01D**.கூடுகளினுள்ளே் இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும். கூட்டில் காட்டப்பட்டுள்ள விலங்குகள் நரி. சிங்கம்/ ஆமை ஆகும்.விடைகளில் உரு 1 இல் உச்சி பொருந்தாது. உரு 2 இல் நீரிலுள்ள சுறா மீன் உரு 3 இல் குதிரை எனவே சரியான
**விடை 03**

**2020 - 04**

**01D .**கூடுகளினுள்ளே் இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும் .
கூட்டில் காட்டப்பட்டுள்ளவை தாள வாத்தியக் கருவிகளாகும்.விடைகளில்
உரு 1 இல் உள்ளது தபேலா வாத்தியக் கருவி ஆகும்..
உரு 2 இல் உள்ளது ஆர்மோனியம் இசைக் கருவியாகும்
.உரு 3 இல் உள்ளது வயலின் இசைக்கருவியாகும்.
எனவே சரியான **விடை 01**

**2008 01**

**01D** .கூடுகளினுள்ளே் இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப பொருத்தமான விடையைத் தெரிவு செய்தல் ஆகும் .
உரு 1 இல் பெட்டியிலுள்ள பென்சிலும் பேனாவும் எழுது கருவிகளாகும். உரு 2 இல் பெட்டியிலுள்ள கத்திரிகோலும் மூக்குக் கண்ணாடியும் ஒற்றுமை அற்றவை. உரு 1 இல் பெட்டியிலுள்ள கிரிகெட் பந்தும் உதைபநதாட்ட பந்தும் விளையாட்டுப் பொருட்கள்.
உரு 1 இல் பெட்டியிலுள்ள குவளையும் சாடியும் நீரேந்து பாத்திரங்கள். எனவே சரியான **விடை 02**

**2008 - 02**

**01D**. கூடுகளினுள்ளே இடப்பட்டுள்ள கோலத்தித்திற்கேற்ப பொருத்தமான விடையைத் தெரிவு செய்தலஆகும் . உரு 1 இல் பெட்டியிலுள்ள உலங்கு வானூர்தியும் காரும் போக்குவரத்து சாதனங்கள்.உரு 2 இல் பெட்டியிலுள்ள மெழுகுதிரியும் தீபச் சிட்டியும் ஒளி தருவன.
உரு 3 இல் பெட்டியிலுள்ள கடிகாரமும் டென்னீ'ஸ் மட்டையும் சம்பந்தமற்றவை.
உரு 4 இல் பெட்டியிலுள்ள டொலாக்கும் றபானும் தோல் வாத்தியக் கருவிகள். எனவே சரியான **விடை 03**

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# வடக்கில் யுத்தத்துக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள்

## யாழில் கெஹலிய பெருமிதம்!

யாழ்ப்பாணம், மார்ச்.20

**யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம் என்று அஞ்சல் சேவைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**



யாழ். வட்டுக்கோட்டையில் நேற்றுப் புதிய தபாலக கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தபால் சேவை என்பது மக்களின்அவசிய மான சேவையாகக் காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம் பெற்ற சம்பவங்கள் தொடர்பில் கவலைப் பட்டாலும் 2010 இற்குப் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2009 இற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்கு காரணமான அரசியல் காரணங்கள் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு திட்டங்களை நாம் வடபகுதியில் மேற்கொண்டுள்ளோம்.

சுபீட்சத்தின் நோக்கு என்ற எமது அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ் வடபகுதியிலும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் கிராம மட்டங்களிலும், பிரதேச மட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

கொரோனா தொற்று அச்சுறுத்தல்காலத்திலும் கூட தபால் சேவையானது மிகவும் சிறப்பாகச் செயல்பட்டது. இந்த வைரஸ் தொற்று காலத்திலும் கூட எமது தபால் சேவை ஊழியர்கள் தமது கடமையைச் சிறப்பாக மேற்கொண்டிருந்தனர். அதற்காக எனது பாராட்டுக்களைத் தெரிவித் துக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம்பிரதேசத்தை பொருத்த வரை விவசாயம், கல்வி, உயர் கல்வி மற் றும் சுகாதாரம் போன்ற துறைகளே மிக முக்கிய துறைகளாகக் காணப்படுகின்றன. அத்துடன் இந்தத் துறைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவையுள்ளது.

மேற்குறிப்பிட்ட இந்தத் துறைகளை ஒன்றிணைத்து முன்னோக்கி கொண்டு செல்வதற்கு பெரும் உதவியாக இருப்பது இந்தத் தபால் துறை என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன். ஒரு இணைப்புக் கருவியாகவே நான் தபால் துறையைக் காண்கின்றேன்.

எமது அரசாங்கமானது வடபகுதி அபிவிருத்தி தொடர்பில் மிகவும் ஆர்வமாகச் செயல்படுகின்றது.

தபால் துறையை நவீனப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. 224 வருடங்கள் பழைமை வாய்ந்த தபால் துறையை நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி எவ்வாறு முன்னேற்றுவது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

உலக நாடுகளிலுள்ள தபால் துறையைப் போன்று நமது நாட்டிலும் அதி நவீன வசதிகளைக் கொண்ட வகையில் எமது நாட்டின் தபால் துறையை மேம்படுத்துவதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (எ)

# பெரும்பாலானோரின் இரட்டைவேடம் அம்பலம்

## என்கிறார் ஜீவன் தொண்டமான்

ஹற்றன், மார்ச்.20

பெரும்பாலானோரின் இரட்டை வேடம் தற்போது அம்பலமாகியுள்ளது. நாங்கள் மக்களுக்காகத்தான் தொழிற் சங்கம் நடத்துகின்றோம் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.



சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் இயங்கும் பிரஜா சக்தி செயல்திட்டத்தின் 15 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை ஹற்றன் - டிக்கோயா வனராஜா பகுதியில் பிரஜா சக்தி நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

'தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நாம் தற்போது நிறைவேற்றி வருகின்றோம். நாம் பதவிக்கு வந்து ஒரு வருடம்கூட நிறைவடையவில்லை. இருப்பினும் பல்கலைக்கழகம், ஆயிரம் ரூபாய் போன்ற உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அடுத்ததாக வேலையின்மை பிரச்னைக்கும் விரைவில் தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஓரிருவருக்கு வேலை வழங்குவது என்பது வேலை வாய்ப்புக்களை உருவாக்குவது அல்ல. தொழிற்சாலைகள், கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்பட வேண்டும். முதற்கட்டமாக ஆயிரம்பேருக்கு வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

இதேவேளை, ஆயிரம் ரூபாய் தொடர்பில் தற்போது பலர் பேசுகின்றனர். ஆயிரம் ரூபாய் மாத்திரம் எமது இலக்கு அல்ல. எமது பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏனைய நன்மைகளை பெற்றுக் கொடுப்பதற்காகவே பாடுபடுகின்றோம்.

கூட்டு ஒப்பந்தம் சரியில்லை என்றனர். தற்போது ஆயிரம் ரூபாய் கிடைத்துள்ள நிலையில், கூட்டு ஒப்பந்தம் அவசியம் என்கின்றனர். ஊடகங்கள் முன்னால் உரையாடியே சிலர் அரசியல், தொழிற்சங்கம் நடத்துகின்றனர். இவர்களின் இரட்டை வேடம்தற்பொழுது அம்பலமாகியுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# மாகாண சபை முறைமை என்பது கொரோனாவை விடக் கொடியது!

## முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எதிர்ப்பு

கொழும்பு,மார்ச்.20

**இலங்கைக்கு மாகாண சபை முறைமை பொறுத்தமற்றது எனவும், மாகாண சபை முறைமை என்பது கொரோனா வைரஸை விட வும் கொடியது என்றும் நாரஹேன்பிட்டி அபய ராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.**

இலங்கையில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போதே நாம் அதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தோம்.

இலங்கையைப் போன்ற சிறிய நாட்டுக்கு மாகாண சபை முறைமை பொறுத்தமானதாக இருக்காது. இந்த நிலைப்பாட்டில் மகா சங்கத்தினரும் உறுதியாகவுள்ளனர். எனவே, மாகாண சபை முறைமை மீண்டும் ஆரம்பிக்கப்படுமாயின் அது பாரிய அழிவாகும்.

எனினும், அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தி மாகாண சபைக்கு



எதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம் -என்றார். (எ)

# போதைப்பொருள், ஆயுதங்களுடன் இலங்கைப் படகுகள் இந்தியாவில்!

சென்னை,மார்ச்.20

இந்தியக் கடலோரக் காவல் படையினர் லட்சதீவுகளுக்கு அருகே இலங்கை மீன்பிடிப் படகுகளைத் தடுத்து, அதிலிருந்து பெருந்தொகை போதைப் பொருள்களை பறிமுதல் செய்துள்ளனர்.

முதற்கட்ட தகவல்களின்படி, இந்தப் படகுகளிலிருந்து ஹெரோயின், ஏ.கே - 47 ரக துப்பாக்கி மற்றும் 1,000 துப்பாக்கி ரவைகள் என்பன கடலோரக் காவல் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இந்தியக் கடற்படையின் கூற்றுப்படி, கடற்படையின் ஒரு டோர்னியர் விமானம் கடந்த எட்டு நாள்களாக அரேபியா கடலில் நகர்ந்து காணப்பட்ட ஏழு இலங்கைப் படகுகளைக் கண்காணித்து வந்தது.

இந்த விமானம் தெற்கு கடற்படை கட்டளை மற்றும் இந்தியக் கடற்படைக்கு கடலோரக் காவல்படையுடன்ஒருங்கிணைந்து படகுகளைத் தடுத்து நிறுத்த விரைவான நடவடிக்கையை மேற்கொண்டது.

மினிகோய் தீவுகளுக்கு தென்மேற்கே 90 கடல் மைல் தொலைவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இப்படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டன.

லட்சதீவுகள் நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை, கடந்த 7 ஆம் திகதி அங்கீகரிக்கப்படாத தொலைத்தொடர்பு உபகரணங்கள் மற்றும் போதைப்பொருள்களுடன் மூன்று இலங்கைப் படகுகளை இந்தியக் கடலோரக் காவல்படையினர் பறிமுதல் செய்ததுடன், படகில் பயணித்த 12 பேரும் கைதுசெய்யப்பட்டு, திருவனந்தபுரத்தில் உள்ள விஜின் ஜாம் துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

# 8 லட்சத்து 15,585 பேருக்கு இலங்கையில் தடுப்பூசி

கொழும்பு, மார்ச்.20

இலங்கையில் 8 இலட்சத்து 15 ஆயிரத்து 585 பேர் இதுவரை ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ராசெனேகா கொரோனா தடுப்பூசி பெற்றுள்ளனர்.

இதில், நேற்று முன்தினம் மாத்திரம் 9 ஆயிரத்து 136 பேருக்கு தடுப்பூசி டோஸ்கள் வழங்கப்பட்டன என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையின் கொரோனா தடுப்பூசி இயக்கம் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பமானது.

# பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் மழை பெய்யும்

கொழும்பு, மார்ச்.20

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அடுத்த சில நாள்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் உயர்வாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ, தென், மேல், மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் காலை வேளையிலும் மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் மேல் மாகாணங்களில் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன்கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பிரதேச சபை உறுப்பினருக்கு விளக்கமறியல்

பண்டாரகம, மார்ச்.20

கைது செய்யப்பட்ட பண்டாரகம பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விஷேட தேவையுடைய இராணுவச் சிப்பாய் ஒருவர் மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்தே எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (எ)

# பூசகர் உட்பட நால்வருக்கு கொரோனா இந்துக் கோவில் தற்காலிகமாக மூடல்!

மஸ்கெலியா, மார்ச்.20

மஸ்கெலியாவிலுள்ள இந்துக் கோவில் ஒன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

பூசகர் உட்பட நால்வருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்தே சுகாதாரத் தரப்பினரால் இந் தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. (எ)

# பஸ்ஸில் பயணித்த வயோதிபர் மரணம்

மன்னார், மார்ச்.20

மன்னாரிலிருந்து கண்டி நோக்கி நேற்றுக் காலை பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸில் பயணித்த வயோதிபர் ஒருவர் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்தார்.

மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்திலிருந்து இந்த பஸ் நேற்றுக் காலை 5.30 மணியளவில் பயணிகளுடன் கண்டி நோக்கிப் பயணித்தது.

மன்னார் பிரதான பாலத்தடியிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடியில் இந்த பஸ் சோதனைக்காக நிறுத்தப்பட்டது.

இதன் போதே குறித்த வயோதிபர் பஸ்ஸின் இருக்கையில் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

உடனடியாக இவரது சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மரண அறிவித்தல்

மலர்வு 19 - 01 - 1933



உதிர்வு 18 - 03 - 2021

நயினாதீவு அமுத சுரபி அன்னதான சபையின் ஆரம்ப கர்த்தாவில் ஒருவரும், பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபா நிலையம் (சாயி நயனம்) நயினாதீவின் ஆரம்ப கர்த்தாவும், சமய, சமூகத் தொண்டருமான

## உயர்திரு. முருகேசு சண்முகராசா

யா/நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட முரு கேசு சண்முகராசா அவர்கள் கடந்த (18.03.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், வரலெட்சுமி அவர்களின் பாசமிகு கணவரும், கலைவாணி, சந்திரவதனி, தர்மகுலராசா, சத்தியவாணி, சுமந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பகீரதன், முருகபத்மராஜா, செல்வகுமாரி, மனோகரன், நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கணேசு, சிவக்கொழுந்து, நாகரெத்தினம், கோபாலபிள்ளை, இராசமணி, சின்னராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம் மற்றும் நாகலெட்சுமி, குணலெட்சுமி ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாயிரதன், ஜெனட் சாய்ரஜா, சுபேஜன், கனகரதன், ஷிவாந்தி, ஸ்ரீஹரி, ஸ்ரீதாஸ், சகானா, ஸ்ரீராகவி, யுகேந்திரன், சயந்தினி, அபிநாஷ், ரிஷாந், வியுஷாந், வர்ஷிகன், அபிராம், அபிசாயிராம் ஆகியோரின் பாசமிகு பேரனும், சாய்லேஸ், சுயேஸ், வைஷ்ரா, அமரா (ஸ்ரீதேவி) சுகனா, சகாதேவி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (19.03.2021) வெள்ளிக்கிழமை பி.ப 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**இல. 7 ஆம் வட்டாரம், நயினாதீவு, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி இலக்கம்: 077 086 7269**

# அமெரிக்கா - சீனா முதல் பேச்சு: கடும் கண்டனங்களே பரிமாற்றம்!

வாஷிங்டன், மார்ச் 20

அமெரிக்காவும் - சீனாவும் முதன்முறையாக உயர்மட்ட பேச்சு மேசை ஒன்றில் பங்கேற்றனர். அலாஸ்காவில் நேற்று முன்தினம் வியாழன் இரவும், நேற்று வெள்ளிக் கிழமை காலையும் மூன்று கட்டங் களாக இந்தப் பேச்சுக்கள் நடந்தன.

இரு வல்லரசு நாடுகளிடையேயு மான உறவுகள் பல ஆண்டுகளாக பாதிக்கப்பட்டுள்ளன. இந்நிலை யில், இதனைத் தீர்க்கும் பொருட்டு நடந்த இந்தப் பேச்சில் இரு நாடு களின் அதிகாரிகளும் கடும் கண்ட னங்களையே பரிமாறிக் கொண்ட னர்.



"சீனாவை தாக்குதவதற்கு நாடு களை அமெரிக்கா தூண்டுகிறது", என்று சீன அதிகாரிகளும், அதே நேரம், சீனா "பெரும் நோக்கத்திற்கு வந்துவிட்டது", என்று அமெரிக்க அதிகாரிகளும் தெரிவித்தனர்.

இந்தப் பேச்சு மேசையில் அமெரிக்காவின் வெளியுறவு செய லர் அன்ரன் பிளிங்கன், தேசிய பாது காப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் ஆகியோரும், சீனாவின் மூத்த வெளியுறவு கொள்கை அதிகாரி யாங் ஜூச்சி, வெளியுறவு அமைச்சர் வாங் யி ஆகியோரும் பங்கேற்றனர்.

மூடப்பட்ட அறைக்குள் நடந்த இந்தப் பேச்சு சுமார் இரு மணி நேரத் துக்கும் மேல் தொடர்ந்ததாக அமெ ரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹொங்கொங், தாய்வான், ஜின்ஜியாங்கின் உய்குர் முஸ்லிம்கள் பிரச்னைகள் குறித்தும் அமெரிக்கா மீதான சைபர் தாக்குதல்கள் குறித்தும் ஆழமாக விவாதிக்கப் படும் என்று அமெரிக்காவின் வெளிவிவகார செயலர் பிளிங்கன் தெரிவித்திருந்தார்.

அத்துடன், சீனாவின் இந்த நட வடிக்கைகள் ஒவ்வொன்றும் உலகளாவிய ஸ்திரத் தன்மையை பராமரிக்கும் விதிகள் சார் ஒழுங்கை அச்சுறுத்துகின்றன - என்றார்.

பிளிங்கனின் குற்றச்சாட்டுக்குப் பதிலளித்த , சீனாவின் மூத்த வெளி யுறவு கொள்கை அதிகாரி யாங் ஜூச்சி, "அமெரிக்கா தனது இரா ணுவ வலிமையையும் நிதி மேலா திக்கத்தையும் மற்ற நாடுகளை அடக்குவதற்கு பயன்படுத்துகிறது" என்று சாடினார். அத்துடன், "தேசிய பாதுகாப்பு பற்றிய கருத்து கள் துஷ்பிரயோகம் செய்யப்படு கின்றது. சில நாடுகளை சீனாவை தாக்கவும் தூண்டுகிறது வாஷ ிங்டன் தூண்டுகிறது" என்றும் யாங் கூறினார்.

மேலும், அமெரிக்காவில் மனித உரிமைகள் மிகக் குறைவாக உள் ளன. கறுப்பின அமெரிக்கர்கள் படு கொலை செய்யப்படுகின்றனர் என்றும் யாங் இதன்போது சுட்டிக் காட்டினார்.

சல்லிவன், "அமெரிக்கா சீனாவு டன் மோதலை தேடவில்லை. நாங் கள் எப்போதும் எங்கள் மக்களுக் காககவும் எங்கள் நண்பர்களுக்கா கவும் எங்கள் கொள்கைகளுக்கா கவும் எழுந்து நிற்போம்", எனவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

சீனாவும் இணைந்து செயலாற்றுவதை விரும்பினாலும், தேசிய இறையாண்மை மற்றும் பாதுகாப்பு விடயங்களில் சமரசம் செய்ய அவர்கள் மறுத்துவிட்டனர். சீனப் பொருட்கள் மீது ட்ரம்ப் விதித்த கட்டுப்பாடுகளை நீக்கவும் அந்நாடு விரும்புகிறது. அத்துடன் தனது உள்விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா நிறுத்த வேண்டும் என்று அது கூறியுள்ளது.

# கருணைக்கொலைக்கு ஸ்பெயின் அனுமதி!

மட்ரிட், மார்ச் 20

ஸ்பெயின் நாட்டில் தீராத நோயால் நீண்ட நாட்கள் அவதிப்படுவோர் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவர்கள் மருத்துவ உதவியுடன் வாழ்க்கை நடத்துவது போராட்டமாகவே இருக்கிறது.

எனவே, இதுபோன்றவர்களை கருணை கொலை செய்ய அனுமதிக்கும் சட்டம் ஸ்பெயின் பாராளுமன்றத் தில் கொண்டு வரப்பட்டது. கீழ் சபையில் கொண்டுவரப் பட்ட இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக 202 எம்.பி.க் கள் வாக்களித்தனர். எதிராக 140 வாக்குகள் பதிவாகின.

எதிர்வரும் ஜூன் மாதம் முதல் இந்த கருணை கொலை சட்டம் அமுலுக்கு வரும் என்று எதிர்பார்க் கப்படுகிறது. இடது சாரி கூட்டணி அரசு இந்த சட் டத்தை கொண்டு வந்துள்ளது. இதற்கு தீவிர வலது சாரி கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். நாங்கள் ஆட்சி அமைக்கும் போது இந்த கருணைக்கொலை சட்டத்தை நீக்குவோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# புடின் கொலையாளி: பைடன் குற்றச்சாட்டு!

வாஷிங்டன், மார்ச் 20

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனை தோற்கடிக்க ரஷ்யா தலை யீடு செய்தது என்று அந்த நாட்டின் தேசிய உளவு அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

இந்நிலையில், இது தொடர்பில் ஜனாதிபதி பைட னிடம் கேட்கப்பட்டபோது, "இதற்கான விலையை அவர் (புடின்) கொடுப்பார். அவர் ஒரு கொலையாளி", என்று விமர்சித்திருந்தார்.

பைடனின் இந்த விமர்சனத்தால் கோபமடைந்த ரஷ்யா தனது தூதுவரை உடனடியாக நாடு திரும்பு மாறு உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த நாட்டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் செர்ஜி ரியாப்கோவ் கூறும்போது, 'ரஷ்ய - அமெரிக்க உறவுகள் மேலும் மோசம் அடைவத ற்கான பொறுப்பு அமெரிக்காவிடம் தான் முழுமையாக உள்ளது' என்றார். இதனால் அமெரிக்கா - ரஷ்யா இடையே மோதல் போக்கு முற்றுகிறது. (ஐ)




# 'அஸ்ராஜெனகா' மீதான தடை ஐரோப்பாவில் நீக்கப்படுகிறது!

## பிரெஞ்சு பிரதமர் ஊசி ஏற்றுகிறார்

பாரிஸ், மார்ச் 20

இங்கிலாந்து - சுவீடன் கூட்டுத் தயா ரிப்பாகிய "அஸ்ராஜெனகா வைரஸ் தடுப்பூசி பாதுகாப்பானது, செயல்திறன் மிக்கது" என்று ஐரோப்பிய ஒன்றியத் தின் மருந்துகள் நிறுவனம் மீண்டும் உத்தரவாதம் வழங்கியுள்ளது.

இதனை அடுத்து அந்த தடுப்பூசியை இடைநிறுத்தி வைத்திருந்த பல நாடுகள் அதன் பாவனையை மீண்டும் ஆரம்பிக் கின்றன.

அஸ்ராஜெனகா தடுப்பூசி இரத்தம் உறைதல், மூளையில் இரத்தக் கட்டி போன்ற பக்க அறிகுறிகளுக்குக் காரண மாகின்றது என்ற அச்சம் எழுந்ததை அடுத்து இருபதுக்கு மேற்பட்ட ஐரோப்பிய நாடுகள் அதன் பாவனையை இடைநிறுத்தி வைத்திருந்தன.

ஐரோப்பாவில் சுமார் இரண்டு கோடி பேருக்கு அஸ்ராஜெனகா தடுப் பூசி ஏற்றப்பட்டுள்ளது. அதில் உடல் இரத்தக் கட்டிகளால் ஆக ஏழு பேரும், மூளை இரத்தக் கட்டிகளால் 18 பேரும் மாத்திரமே பாதிக்கப்பட்டனர். இரத்தக் கட்டிகளுக்கும் தடுப்பூசிக்கும் தொடர்பு இருப்பது நிரூபிக்கப்படவில்லை-என்று ஐரோப்பிய மருந்துகள் நிறுவனம் தெரி வித்துள்ளது.

"தடுப்பூசியின் நன்மைகள் அதன் ஆபத்தைவிட அதிகம்" என்று ஐரோப் பிய ஒன்றிய மருந்துகள் நிறுவனத்தின் ஆய்வுக் குழு நிபுணர் டாக்டர் ஸ்ட்ராஸ் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, பிரான்ஸில் அஸ்ரா ஜெனகா ஊசி போடும் பணி நேற்று முதல் மீண்டும் ஆரம்பமானது. அந்த நாட்டின் பிரதமர் தடுப்பூசியை ஏற்ற வுள்ளார். 55 வயதான அவர் வயது வரம் பின் அடிப்படையில் இன்னமும் காத்தி ருக்க வேண்டும். ஆனால், மக்கள் தடுப் பூசியின் மீது நம்பிக்கை கொள்ளும் வித மாக அவர் முற்கூட்டியே ஊசியை பெற் றுக் கொள்கின்றார் என்பது குறிப் பிடத் தக்கது. (ஐ)

# ட்ரோன்களால் முகிலில் மின்னதிர்வை உருவாக்க மழையை பெய்விக்க திட்டம்!

டுபாய், மார்ச் 20

வானத்தில் முகில் கூட்டங்களுக்குள் சிறிய ரக ஆளில்லா விமானங்களை அனுப்பி மின் அதிர்வலைகளை ஏற்படுத் துவதன் மூலம் மழை பெய்ய வைக்கும் பரிசோதனை முயற்சியை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முன்னெடுக்கவுள்ளது.

அடுத்த சில வாரங்களில் டுபாய்க்கு அருகில் உள்ள பகுதிகளில் இருந்து ட்ரோன்களை அனுப்பி இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வுள்ளது.

மேகத்தில் உப்பு தூவி மழை பெய்ய வைக்கும் மழைக் கருவூட்டல் தொழில் நுட்பத்தை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஏற்கனவே பயன்படுத்தி வருகிறது.

எனினும், அந்நாட்டில் வருடாந்த மழை வீழ்ச்சி 100 மி.மீ. என மிகக் குறைந்த அளவே உள்ளது.

இந்நிலையிலேயே முகில் கூட்டங் களுக்குள் சிறிய ரக ஆளில்லா விமானங்களை அனுப்பி அதிர்வலை களை ஏற்படுத்தி மழை பெய்ய வைக்கும் முயற்சியை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஈடுபடவுள்ளது.

இந்தத் திட்டம் வெற்றியளித்தால் எதிர்காலத்தில் பெரிய விமானம் மூலம் முகில் கூட்டங்களில் மின் சக்தி மூலம் அதிர்வலைகளை ஏற்படுத்தி மழை பெய்யச் செய்யும் திட்டம் முன்னெடுக் கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)





## ரோஹித் சர்மா புதிய மைல்கல்!

அஹமதாபாத், மார்ச் 20

இந்திய அணியின் தொடக்க வீரர் ரோஹித் சர்மா புதிய மைல்கல்லை எட்டியுள்ளார். ஒட்டுமொத்த இருபது - 20 போட்டிகளில் 9 ஆயிரம் ஓட்டங்களை குவித்த இரண்டாவது வீரர் என்ற பெருமையை அவர் நேற்று முன்தினம் பெற்றார்.

இங்கிலாந்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த இந்தப் போட்டியில் அவர் 12 ஓட்டங்களையே எடுத்தார். ஆனால், அவர் 11 ஓட்டங்களைப் பெற்ற போதே இந்த மைல்கல்லை எட்டினார். சர்வதேச, ஐ.பி.எல். என இருபது - 20 போட்டிகளை உள்ளடக்கியே இந்த சாதனை கணக்கிடப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்திய அணியின் தலைவர் கோலி 9,650 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார். ஆனால், சர்வதேச இருபது - 20 போட்டிகளில் 13,270 ஓட்டங்களுடன் கிறிஸ் கெய்ல் முதலிடத்தில் இருக்கிறார்.

ரோஹித் சர்மா 200 ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடி 5,230 ஓட்டங்களையும், 110 சர்வதேச இருபது - 20 போட்டிகளில் 2800 ஓட்டங்களையும் குவித்துள்ளார்.

இதேவேளை சர்வதேச இருபது போட்டிகளை 4 சதங்களை அடித்த ஒரேஒரு வீரர் ரோஹித் சர்மாதான் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை வருகின்றது பங்களாதேஷ் அணி!



கொழும்பு, மார்ச் 20

இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக பங்களாதேஷ் அணி இலங்கை வரவுள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் ஒரு பகுதியாகவே இந்தத் தொடர் இடம்பெறவுள்ளது. இந்த இரு போட்டிகளும் கண்டி - பல்லேகலவில் நடைபெறும் என்று நேற்று இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

2020 ஜூலையில் பங்களாதேஷ் 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட திட்டமிட்டிருந்தது. ஆனால், கொரோனா தொற்றுப் பரவலால் இந்தத் தொடர் நடக்கவில்லை.

ஏப்ரல் 12ஆம் திகதி இலங்கை வரும் பங்களாதேஷ் அணி, ஏப்ரல் 21 - 25 வரை முதல் போட்டியும், ஏப்ரல் 29 - 3 வரை இரண்டாவது டெஸ்ட் போட்டியிலும் விளையாடவிருக்கின்றது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் இந்தத் தொடர் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது. இதன் இறுதி யாட்டத்துக்கு இந்தியா - நியூஸிலாந்து அணிகள் ஏற்கனவே தகுதி பெற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இங்கிலாந்துக்கு எதிரான ரி - 20:

# இந்தியா 'த்ரில்' வெற்றி!

அஹமதாபாத், மார்ச் 20

அறிமுகப் போட்டியில் 6 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்கள் என விளாசி சூரியகுமார் யாதவ், 31 பந்துகளில் 57 ஓட்டங்களை குவிக்க, புவனேஸ்வர் குமார், ஹார்திக் பாண்ட்யாவின் கட்டுக்கோப்பான பந்து வீசி அசத்த, இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது இருபது - 20 போட்டியை 8 ஓட்டங்களால் வெற்றி பெற்றது இந்திய அணி.

இந்தியா சென்றுள்ள இங்கிலாந்து அணி தற்போது 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது. அஹமதாபாத் மைதானத்தில் நடக்கும் இந்தத் தொடரில் 2-1 என இங்கிலாந்து அணி முன்னிலை பெற்றிருந்த நிலையில், நான்காவது போட்டியில் நேற்று முன்தினம் இரு அணிகளும் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

தொடக்கம் கொடுத்த ரோஹித், ராகுல் இணை சோபிக்கவில்லை. ரோஹித் 12 ஓட்டங்களுடன் வெளியேற அடுத்து வந்தார் சூரியகுமார் யாதவ். அவர் அடித்தாட, எதிர் முனையில் பொறுமை காத்த, ராகுல் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அணித் தலைவர் கோலி ஓர் ஓட்டத்துடன் வெளியேறினார்.

பின்னர் வந்த ரிஷப் பந்த் தனது வழக்கமான பாணியில் அடித்தாடினார். 31 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 6 பௌண்ட்ரிகளை விளாசிய சூரியகுமார் யாதவ் அறிமுகப் போட்டியிலேயே அரைச்சதம் கடந்து அசத்தினார். அவர் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ரிஷப் பந்துடன் இணைந்தார் ஸ்ரேயாஸ் ஐயர். பந்த் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, ஸ்ரேயாஸ் ஐயர் 18 பந்துகளை சந்தித்து ஒரு சிக்ஸர், 5 பௌண்ட்ரிகளை விளாசி 37 ஓட்டங்களைப் பெற்ற வெளியேறினார்.

20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஜோப்ரா ஆச்சர் 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். ரசீத், மார்க் வூட், பென் ஸ்ரோக்ஸ் சாம் கரன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடியது இங்கிலாந்து. தொடக்கம் கொடுத்த ஜசொன் றோய் அதிரடியாக ஆடி, 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 40 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்தவர்களில் பென் ஸ்ரோக்ஸ் மட்டும் போராடினார். அவர் 3 சிக்ஸர்கள், 4 பௌண்ட்ரிகளை விளாசி 23 பந்துகளில் 46 ஓட்டங்களைக் குவித்து தாகூரின் பந்தில் யாதவிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.



இறுதித் தருணத்தில் ஆர்ச்சர் அதிரடி காட்டினார். அவர் 8 பந்துகளில் 18 ஓட்டங்களை எடுத்தார். ஆனாலும், முன்னர் களமிறங்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமையால் 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 177 ஓட்டங்களையே இங்கிலாந்து அணியால் பெறமுடிந்தது. இதனால் 8 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றி பெற்றது.

இந்திய அணியின் பந்து வீச்சில் தாகூர் 3, சாகர், ஹார்திக் பாண்ட்யா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவானார்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் 2 - 2 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் உள்ளன. இதனால், இன்றிரவு நடக்கவுள்ள இறுதிப் போட்டி தொடரின் வெற்றி - தோல்வி யாருக்கு என்பதைத் தீர்மானிக்கும் போட்டியாக மாறியுள்ளது. (ஐ)

### இங்கிலாந்துடனான ஒருநாள் தொடர்:

## இந்திய அணி அறிவிப்பு!

புதுடில்லி, மார்ச் 20

இங்கிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான 18 பேர் கொண்ட அணியை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) அறிவித்துள்ளது.

இதில், வேகப்பந்துவீச்சாளர் பிரசித் கிருஷ்ணா, சூரியகுமார் யாதவ் ஆகியோர் அறிமுக வீரர்களாக இடம்பெற்றுள்ளனர். தமிழ் வீரர்களான நடராஜன், வாஷிங்டன் சுந்தர் ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

இரு அணிகள் இடையேயான முதல் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி புனேவில் தொடங்குகின்றது. மற்றப் போட்டிகள் 26, 28 ஆம் திகதிகளில் புனேயிலேயே நடக்கவுள்ளன.

அணி விவரம்: விராட் கோலி (தலைவர்), ரோஹித் சர்மா, ஷிகர் தவான், ஷுப்மன் கில், ஸ்ரேயாஸ் ஐயர், சூரியகுமார் யாதவ், ஹார்திக் பாண்ட்யா, ரிஷப் பந்த், கே.எல்.ராகுல், யஜூவேந்திர சாஹல், குல்தீப் யாதவ், குர்னல் பாண்ட்யா, வாஷிங்டன் சுந்தர், நடராஜன், புவனேஷ்வர் குமார், முகமது சிராஜ், பிரசித் கிருஷ்ணா, ஷர்துல் தாகூர்.





## இங்கிலாந்துக்கு ஐ.சி.சி. அபராதம்

டுபாய், மார்ச் 20

இந்தியாவுக்கு எதிரான நான்காவது இருபது - 20 போட்டியில் தாமதமாகப் பந்து வீசியதற்காக இங்கிலாந்து அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ. சி. சி.) 2.22 விதியை மீறியமைக்காக இங்கிலாந்து வீரர்களின் அந்தப் போட்டிக்கான ஊதியத்தில் இருந்து 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

அணித் தலைவர் இயன் மோர்கன் குற்றத்தை ஏற்றுக் கொண்டதால் மேலதிக விசாரணை நடத்தப்படவில்லை. (ஐ)

## 'கண்ணுக்கு முதலிடமளிக்கும் சேவை'

யாழ்ப்பாணம், மார்ச்.20

யாழ்.மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகமும், சுதுமலை அம்மன் அறக்கட்டளை நிதியமும் இணைந்து கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் 'கண்ணுக்கு முதலிடமளிக்கும் சேவை' நாளை ஞாயிறுக்கிழமை காலை 7 மணியளவில் சுதுமலை கிராம அபிவிருத்தி மண்டபத்தில் (சுதுமலை அம்மன் கோவிலடி) நலிவுற்ற மக்களுக்கு தகுதி வாய்ந்த கண்பார்வை பரிசோதகர்களால் பரிசோதித்து வாசிப்பிற்குரிய மூக்கு கண்ணாடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொய்யான விடயங்களை சமூகமயப்படுத்தி மீள நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்ல முயற்சி

## எதிர்த்தரப்பு மீது ஜனாதிபதி குற்றச்சாட்டு



கொழும்பு,மார்ச்.20

பொய்யான விடயங்களை சமூகமயப்படுத்துவதுடன் நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்ல எதிர்த்தரப்பினர் முயற்சிக்கின்றனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ள பிரதான வழி, உற்பத்தி மற்றும் வருமானத்தை அதிகரிப்பதாகும். இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலைகள் உலக சந்தை சக்திகளுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படுகின்றன. வரிகளைக் குறைப்பதன் மூலமே அவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியும்.

உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியுமான 17 வகையான பயிரினங்களை இனங்கண்டு அவற்றின் இறக்குமதியை மட்டுப்படுத்தினோம். தற்போது அவற்றை உள்நாட்டில் பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிடைக்கும் வருமானம் எமது விவசாயிகளுக்கும் எமது கிராமங்களுக்குமே சென்றடைகிறது.

ஒரு கிலோ நெல்லுக்கு முன்னர் வழங்கிய 32 ரூபாவை 50 ரூபாவாக அதிகரித்ததன் பின்னர் உற்பத்தி மற்றும் விவசாயிகளின் வருமானம் அதிகரித்துள்ளது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நெல்லின் விலையை அதிகரித்ததன் மூலம் கிடைக்கும் இலாபம் குறித்த ஒரு பிரதேசத்துக்கு மட்டுமன்றி முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கும் கிடைப்பதாகவும், மனித உரிமைகள் பற்றி பேசுபவர்கள் இவ்வாறான விடயங்களால் மக்கள் அடையும் பயன்கள் எதைப் பற்றியும் கூறுவதில்லை என்றும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுன மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் செயல்பாட்டாளர்களுடன் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தனது வெற்றிக்கும், தனது அரசாங்கத்தின் வெற்றிக்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுன மகளிர் அமைப்பின் பங்களிப்பை பாராட்டி தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி, அரசாங்கத்தின் முன்னேற்றத்தை அளவிடும்போது, அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகள் மற்றும் அவற்றின் பயன்களை அவதானிக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அபிவிருத்தியின் பிரதிபலன்கள் அனைத்து மக்களையும் சென்றடைகின்றன. இதன் மூலம் உற்பத்தியாளர்கள் மாத்திரமன்றி நுகர்வோரும் பயன்பெறுகின்றனர். நாம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பாரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

உழைக்கும்போது செலுத்தும் வரியை இரத்து செய்ததால் அரச ஊழியர்களின் வருமானம் அதிகரித்தது. இந்தப் பெறுபேற்றை கண்டுகொள்ளாதவர்கள் பொய்யான விடயங்களை சமூகமயப்படுத்துவதுடன் நாட்டை மீண்டும் அழிவுப் பாதைக்கு இட்டுச்செல்ல முயற்சிக்கின்றனர் என்றும் ஜனாதிபதி குறிப்பிட் டார்.

மக்களின் பிரச்னைகளை அரசாங்கம் கண்டுகொள்ளாமல் இருக்க முடியாது. உள்நாட்டு பால்உற்பத்தியை மேம்படுத்துவதற்காக கறவை பசுக்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மேய்ச்சல் நிலங்களை உருவாக்க வேண்டும்.

பரம்பரையாக வசித்துவந்த காணிகளை விவசாயிகள் இழந்திருந்தால் அதற்குத் தீர்வு பெற்றுக்கொடுப்பது சுற்றாடல் அழிப்பு அல்ல. அரசாங்கம் எந்தச்சந்தர்ப்பத்திலும் காடுகளை அழிப்பதற்கு அனுமதியளிக்காது. 2030ஆம் ஆண்டாகும்போது வலுசக்தி தேவையின் 70 வீதத்தை மீள்பிறப்பாக்கத்தின் மூலம் நிறைவு செய்துகொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. சூழலைப் பாதுகாப்பதற்கு இது பெரும் பங்களிப்பைச் செய்யும்.

அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் மக்களின் நலனுக்காக பாரிய வேலைத்திட்டங்களை செயல்படுத்தியுள்ளது. நாட்டுக்குப் பாதகத்தை ஏற்படுத்த முயற்சிப்பவர்கள் இவ் உண்மையை மறைத்து பொய்க் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவி வகித்தபோது முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து முன்னெப்போதும் இல்லாத பாரிய பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொண்டார். ஆனாலும், எதிர்த்தரப்பினர் முன்வைத்த பொய்ப் பிரசாரங்களை நம்பிய மக்கள் 2015 இல் அவரை தோற்கடித்தனர். அதன் பின்னர் பாரிய வீழ்ச்சியே ஏற்பட்டது.

தேசிய பாதுகாப்பு இல்லாமல் ஆக்கப்பட்டது. பொருளாதாரம் வீழ்ச்சி கண்டது. நாட்டில் இறைமை இல்லாதொழிக்கப்பட்டது. தற்போது மீண்டும் ஒருமுறை நாம் எமது நாட்டை அன்று இருந்த நிலைமைக்கு இட்டுச் செல்வதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (எ)


# மரண அறிவித்தல்



மலர்வு 09 - 11 - 1949

உதிர்வு 18 - 03 - 2021

## திரு.செல்லத்துரை கனகரட்னம் (மணி)

[சமாதான நீதவான்]

வேலனை கிழக்கை பிறப்பிடமாகவும். புங்குடுதீவு, கொழும்பு கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லத்துரை கனகரட்னம் (மணி) அவர்கள் (18.03.2021) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை – தங்கலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் – மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் யோகாம்பிகை (கௌரி) அவர்களின் ஆருயிர் கணவரும் ஜெனார்த்தனன் (பிரான்ஸ்), அரவணன் (அரன் – கொழும்பு) ஆகியோரின் தந்தையாரும் சிந்துஜா (பிரான்ஸ்), சுஜிர்த்தா (கொழும்பு) ஆகியோரின் மாமனாரும் அகானா, அஸ்விகா ஆகியோரின் அன்பு பேரனும் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை, நாகரட்ணம், சீவரட்னம், பத்மநாதன் மற்றும் குலராணி (கொழும்பு). செல்வராணி (பிரான்ஸ்). கலாராணி (கொழும்பு) காலஞ்சென்ற வசந்தராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இரட்னேஸ்வரி மற்றும் விமலநாயகி (புங்குடுதீவு). உதயகுமார் (கொழும்பு), மகேஸ்வரி, லலிதா. சரோஜினிதேவி. சத்தியமூர்த்தி, சொர்ணலிங்கம், தவானந்தன் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற தேவராஜா, ஜானகி மற்றும் சிவராசா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.03.2021) சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரை பொரளை ஜெயரட்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (21.03.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் வைக்கப்பட்டு 10.30 மணி முதல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று மதியம் 12 மணியளவில் பொரளை கனத்தை மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

93-2/5, கல்லூரி வீதி,
கொழும்பு -13.

தகவல் : குடும்பத்தினர்
T.P.NO: 077 640 3235, 011 242 1832


# ரஞ்சனின் ரிட் மனு வாதம் நிறைவு சமர்ப்பணங்களுக்கு கால அவகாசம்

கொழும்பு, மார்ச்.20

தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதைத் தடுக்கும் வகையில் எழுத்தாணை ஒன்றைப் பிறப்பிக்குமாறு, நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள ரிட் மனு தொடர்பிலான பரிசீலனையில், வாய்மொழி மூல வாதங்கள் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிலையில், மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்பு சார்பில் எழுத்துமூல சமர்ப்பணங்களை எதிர்வரும் 23 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் இரு தரப்பினருக்கும் உத்தரவிட்டது.

பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் பிறப்பித்து குறித்த மனுவை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள அனுமதியளிப்பதா?, இல்லையா? என்பது தொடர்பிலான தீர்ப்பை அறிவிப்பதற்கான திகதியை தீர்மானிப்பதற்காக மனுவை மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதாக அறிவித்த மேன் முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயா துன்னே கொரேயா ஆகியோர் அடங்கிய குழாம், ரஞ்சனின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை நீடித்தது.

முன்னதாக தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதைத் தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவொன்று பிறப்பிக்குமாறு கோரி, ரஞ்சன் ராமநாயக்க கடந்த 2 ஆம் திகதி மனுத் தாக்கல் செய்திருந்தார்.

மேன் முறையீட்டு நீதிமன்றில் அவர் இந்த ரிட் மனுவை (எழுத்தாணை மனு) தாக்கல் செய்திருந்தார். இம்மனுவில், பிரதிவாதிகளாக பாராளுமன்ற செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவில், கடந்த ஜனவரி 12 ஆம் திகதி, நீதிமன்றை அவமதித்த குற்றத்துக்காக தனக்கு 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை உயர் நீதிமன்றம் விதித்துள்ளதாக ரஞ்சன் ராமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்னணியில், தனக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியில்லை என சட்டமா அதிபர் தனது நிலைப்பாட்டை அறிவித்துள்ளதாக கடந்த ஜனவரி 19 ஆம் திகதி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளதாகவும், எனினும் பாராளுமன்றச் செயலாளர் இதுவரை தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என நம்பகரமான தகவல்கள் ஊடாக தான் அறிந்துகொண்டதாகவும் குறித்த மனுவில் ரஞ்சன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையிலேயே தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதைத் தடுக்கும் வகையில் இடைக்காலத் தடை உத்தர்வொன்றைப் பிறப்பிக்குமாறு குறித்த ரிட் மனு ஊடாக ரஞ்சன் கோரியுள்ளார். (எ)

ஈழநாடு
Eelanadu

# தமிழர் நில ஆக்கிரமிப்பு: சர்வதேச மாநாடு இன்று!

## அனைவரையும் பங்கேற்குமாறு அழைப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 20

**தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களான வடக்கு- கிழக்கில் தீவிரம் அடைந்துள்ள நில அபகரிப்பு தொடர்பிலும் இதற்கெதிராக மேற்கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "தமிழர் தாயகத்தை இழத்தல்: தமிழர் நிலத்தை பாதுகாப்பதற்கான உபாயங்களை வகுத்தலும் பிரச்சினைகளை இனம்காணுதலும்" என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு இன்று இடம்பெறவுள்ளது.**

இன்று சனிக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 6 மணி தொடக்கம் இரவு 11 மணி வரை மெய்நிகர் வழியில் இடம்பெறும்.

இந்த மாநாட்டில் தமிழ் மக்களின் நில ஆக்கிரமிப்பு தொடர்பில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட விருப்பதால் அனைவரும் இந்த மாநாட்டில் கலந்து பயன்பெறுமாறு இந்த மாநாட்டை ஏற்பாடு செய்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன் பொதுமக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் சமூக செயல்பாட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும், முன்னாள் எதிர்க்கட்சி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் சிறப்பு விருந்தினராக இந்த மாநாட்டில் கலந்துகொண்டு நீதியரசர் விக்னேஸ்வரனுடன் இணைந்து இந்த மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றவுள்ளார்.

இந்த மாநாட்டில் ஐ. நா மனித உரிமைகள் சபை முன்னாள் உயர்ஸ்தானிகரும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதியரசருமான திருமதி நவநீதம்பிள்ளை, பிரித்தானியாவின் சர்வதேச மனித உரிமைகள் வழக்குரைஞரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரின் பாரியருமான செரி பிளேயர் மற்றும் கனடாவின் சிறப்பு மிக்கோர் பட்டியலில் இடம்பெற்றுள்ளவரும் 2010 ஆம் ஆண்டு மனித உரிமைகள் செயல்பாடுகளுக்காக நோபல் பரிசுக்கு முன்மொழியப்பட்டவருமான சர்வதேச

15

## மட்டக்களப்பு போராட்டத்திற்கு தடைவிதித்த பொலிசார்!

மட்டக்களப்பு, மார்ச் 20

மட்டக்களப்பில் அன்னை பூபதியின் 33ம் ஆண்டு நினைவு நிகழ்வை ஒட்டியும், இலங்கை அரசாங்கத்தை சர்வதேச நீதிமன்றுக்கு விசாரணைக்கு எடுக்குமாறு வலியுறுத்தியும் கவனயீர்ப்பு போராட்டம் நடத்துவதற்கு பெரிசார் தடைவிதித்துள்ளனர்

இந்தப் போராட்டத்தால் இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படும் என்பதாலும், தற்போது நாட்டில் பரவும் கொரோனா நோய் வேகமாக பரவும் என்பதாலும் இவ்வாறான எந்த ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலம் செய்வது சட்டத்துக்கு முரணானது என அதில் குறிப்பிட்டு மேலும் 26 பெயர் விபரங்களையும் குறிப்பிட்டு பலரிடம் பொலிஸார் வீடுகளுக்குச் சென்று நேரடியாக கையளித்துள்ளனர்.

26 பெயர்களில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், தேசியப்பட்டியல் அம்பாறை பாராளுமன்ற உறுப்பினர் கலையரசன், யாழ்ப்பாணம் வேலன் சுவாமி உள்ளிட்டவர்களின் பெயர்கள் பட்டியலிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஜெனிவா நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு மனிதவுரிமைகளை பாதுகாப்பதே ஒரே வழி

### அரசுக்கு பிமல் ரத்நாயக்க இடித்துரைப்பு

கொழும்பு, மார்ச் 20

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பதாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

'இலங்கைக்கு சர்வதேச தொடர்புகள் அத்தியாவசியமானவையாகும். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இனவாதம், மதவாதத்தின் அடிப்படையில் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முயற்சிக்கின்றார். அதற்காக மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன.

'இவ்வாறு செயற்படும் அரசாங்கம் ஜெனிவா இலங்கைக்கு எதிராக செயற்படுவதாக மக்களிடம் போலி பிரசாரங்களை முன்னெடுக்கிறது. எனவே மனித உரிமைகளை பாதுகாப்பதன் மூலம் ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான பிரேரணையை வெற்றி கொள்ள முடியும். ஜெனிவா நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு காணப்படும் ஒரேயொரு வழி மனித உரிமைகளைப் பாதுகாப்பதாகும்.

'இவ்வாறு செயற்படுவதன் மூலம் ஜெனிவாவில் சார்பான வாக்குகளைப் பெற்றுக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ள போதிலும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் அதனை செய்ய முடியாது. நாட்டை பாதுகாப்பதாகக் கூறி ஆட்சியை கைப்பற்றிய ஜனாதிபதி தற்போது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையை பாதுகாக்க தவறியுள்ளார்' என்றார்.

## சட்ட மா அதிபர் நேற்று யாழ்ப்பாணம் வருகை!



நேற்று யாழ்ப்பாணம் வந்த சட்ட மா அதிபர் தப்புல்ல டி லிவேரா யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கும் சென்றார். அவரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேம்சங்கர் வரவேற்றார்.

வடக்கு மாகாணத்துக்கு நேற்றுக் காலை மன்னார் மாவட்டத்துக்கு சென்றிருந்தார். தொடர்ந்து, நேற்று பிற்பகல் யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு வருகை தந்தார்.

இதன்போது, மேல் நீதிமன்ற நீதிபதி, மாவட்ட நீதிபதிகள், நீதிவான்களையும், சட்டத்தரணிகளையும் சந்தித்து அவர் கலந்துரையாடினார். (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 13169 \| வே \|1986<br>தாவடி\| இந்து \| செவ் : 08<br>Engineer\|Singapore<br>திருவோணம்(மகரம்)\|168செ.மீ | 13515\| ப \|1989<br>நாவற்குழி\| இந்து\|Sri lanka<br>Teacher\|160 செ.மீ \| லக் :செவ்<br>மூலம்(தனுசு) |
| 13680\|வே \|1986<br>காரைநகர்\|இந்து\|லக் :செவ்<br>Assistant Manager\|UK<br>சித்திரை (கன்னி)\|180செ.மீ | 12863\| வே \|1989<br>யாழ்நகரம்\| இந்து \|Teacher<br>Sri Lanka \|165செ.மீ<br>திருவோணம்(மகரம்) |
| 12926\| வே\|1986<br>சங்கானை\| இந்து\|<br>Consultant Engineer \|USA \|<br>உத்தராடம்(தனுசு)\| 170செ.மீ | 13590\| வே \|1989<br>மண்கும்பான் \| இந்து \|Sri lanka<br>Doctor\| புனர்பூசம்(மிதுனம்)<br>163செ.மீ |
| 13454\|ப \|1986<br>திருநெல்வேலி \| இந்து \|<br>Teacher\|Sri lanka<br>கார்த்திகை(ரிஷபம்)\| 165செ.மீ | 15838\| ந\|1996<br>யாழ்நகரம்\|இந்து<br>Sri Lanka\|உத்தராடம்(மகரம்)<br>N/A\| 164செ.மீ |
| 13695\| வே \|1986<br>மானிப்பாய்\| இந்து \| செவ் : 08<br>Editor\| கார்த்திகை (ரிஷபம்)<br>Sri Lanka \| 170செ.மீ | 12842 \| வே\|1990<br>வேலணை\| இந்து \|லக் :செவ்<br>Insurance Assurance<br>Canada\| அஸ்வினி(மேடம்)\|<br>153செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.03.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : வழங்குபவர் திருமதி .கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK

**பகல்**

11.00 மணி : மைதானம்-வாராந்த விளையாட்டு நிகழ்வுகளின் தொகுப்பு



12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை-ஐ.நா மனித உரிமை பேரவையை கூட்டத்தொடரை தமிழர்தரப்பு கையாள்வது.



**இரவு**

7.00 மணி : சுப்பர் குறூப்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) வரலாறு
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) கணிதம்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் தகவல் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் சைவ சமயம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஐ ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : சின்மய சிந்தனை
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா
10.00 மணி : ஐயப்பன் பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : யாழ்ப்பாணம் பருத்தித்துறை சிவன் கோவில் திருவிழா
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்ப்பாணம் புங்குடுதீவு வீரகத்தி விநாயகர் கோவில் திருவிழா

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித மிக்கேல் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : பாடல்
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : இஸ்லாமிய உலகம் (மறு ஒளிபரப்பு)
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்